# திசை

THISAI

திசை 2 | 18-5-1990 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 5-00 | பக்கங்கள் 14 | முகம் 17


## பிரபாவின் சபதம்

''என்னை வெளியில் வரவிட்டதும், நான் ராஜீவ்காந்திக்கு ஒரு பாடம் படிப்பிப்பேன்'' இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், டெல்லியில் தான் தங்கியிருந்த ஹோட்டலிலிருந்தபடி, மதுரையிலிருந்த கிட்டுவிற்குத் தொலைபேசியில் சொன்னாரென்று, இந்தியாவிலிருந்து வெளிவரும் 'இந்து' நாளிதழ் எழுதியுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான காலங்களில் பிரபாகரன் டெல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்பது தெரிந்ததே, அங்கே ராஜீவ் அரசு ஒப்பந்தத்தை அவர்கள் மீது திணிப்பதற்கான நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்தபோதே, பிரபா மேற்கண்டவாறு கிட்டுவோடு தொலைபேசியில் கதைத்தாராம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதேசக் கல்லூரிகள் பிரேதக் கல்லூரிகளாக மாறும்?

**யாழ் வளாகத்தை நிறுவுவதற்கு அன்று ஆட்சியில் அமர்ந்திருந்த அரசாங்கம் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புப் பிரிவையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் சுவீகரித்தது. கிழக்கு மாகாணத்தில் ஒரு வளாகத்தை நிறுவ வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தைச் சுவீகரித்தது.**

இந்த இரு சுவீகரிப்புகளினாலும் தமிழரின் — குறிப்பாக கிழக்குமாகாணத்தின்— உயர்கல்வி ஓரளவிற்கேனும் பாதிக்கப்பட்டது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்; ஏனென்றால் தமிழர் வாழும் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த உயர் கல்வி வசதிகள் இச் சுவீகரிப்பினால் அபகரிக்கப்பட்டன. புதிய உயர் கல்வி வசதிகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாகஏற்கெனவே இருந்த வசதிகளைப் பறித்து விட்டுத்தான் இந்த வளாகங்கள் நிறுவப்பட்டன என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

அன்று ஆட்சி செலுத்திய ஐக்கிய இடது சாரி முன்னணி அரசு தமிழர்களுக்கெனப் பிரத்தியேகமாகப் பல்கலைக்கழகங்களை வழங்கி விட்டதாகத் தம்பட்ட மடித்தது. ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால்,ஒருகையால் பறித்ததை மற்றக்கையால்கொடுத்தது போன்ற ஒருபாவனையே!

மீண்டும் வட கிழக்கு மாகாணங்களில் உயர் கல்விக்கு ஆபத்து வந்து விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

மூன்றாம்நிலைக் கல்வியை முற்றாக மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் அடிபடுகின்றன. ஆனாலும் இம் மறுசீரமைப்புத் திட்டம் இதுவரையும் மூடுமந்திரமாகவே உள்ளது.

ஒன்று மட்டுந்தான் திட்டவட்டமாகத் தெரியும்: பிரதேசக் கல்லூரிகளை நிறுவ அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வாகன அனுமதிப்பத்திரம்: 90 வீத திருப்தி இருந்தாலே வழங்கப்படும்

இதுவரை சுமார் 1000 நான்கு சில்லு வாகனங்கள், விடுதலைப்புலிகளிடம் வாகன அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்துள்ளன. இவற்றுள் இதுவரையும் பரிசோதிக்கப்பட்ட 500 இற்கும் குறையாத வாகனங்களில் சுமார் 300 வாகனங்கள் அனுமதிப் பத்திரம் பெறுவதற்குத் தகுதியுடையவைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 100 வாகனங்களிற்கு அனுமதிப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவல்களை விடுதலைப் புலிகளின் வாகன அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான அலுவலகத்தில் பெறக்கூடியதாக இருந்தது. அங்குமேலும் தெரிவிக்கப்பட்டதாவது: ஒரு வாகனத்தில் மொத்தம் 20 அம்சங்கள் கவனிக்கப்படுகின்றன. இவற்றுள் பிறேக், கிளச், ரயர்கள் போன்றவை கட்டாயமாக நல்ல நிலையிலிருத்தல் வேண்டும். சிறிய சிறிய திருத்தங்களிற்கு கால அவகாசம் தரப்படும். இந்த 20 அம்சங்களில் குறைந்தது 90 விகிதமாவது திருப்தியாக அமைந்திருந்தாலே அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

(1`ஆம் பக்கம் பார்க்க)

## சாம் தம்பிமுத்து கொலை: குற்றச்சாட்டும் மறுப்பும்

மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். நாடாளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்துவை விடுதலைப் புலிகளே சுட்டுக் கொன்றனர் என ஈ. பி. ஆர். எல்.எவ்.நாடாளுமன்ற உறுப்பினர் யோகசங்கரி போன்றவர்கள் .பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டிய போதிலும், விடுதலைப் புலிகளுக்கும் அக் கொலைக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் டொக்டர் அன்ரன் பாலசிங்கம் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைஃபுவிற்குச் செங்கம்பளம் விப்பாசி தேரருக்கு குங்ஃவு

கடந்த சில நாட்களாகரூபவாஹினியில் ஒரே 'அறுவை'. என்னவென்று கேட்கிறீர்களா?

பெல்பொல விப்பாசி தேரர் பௌத்த சங்க சபையிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று மகா நாயக்க தேரர்கள் ஜனாதிபதியைக் கோரியுள்ளனர் என்ற செய்தியே இந்த 'அறுவை'.

இத்தனைக்கும் விப்பாசி தேரர் செய்த குற்றம்தான் என்ன? அவர் அண்மையில் ஜப்பானில் மகாயான பௌத்தத்தைத் தழுவிக் கொண்டமை மகாநாயக்க தேரர்களுக்குப் பொறுக்கமுடியவில்லை!

(12 ஆம் பக்கம் பார்க்க )

## தொல்லியல்: இருட்டடிப்பு தொடர்கிறதா?

தொல்லியல் திணைக்களம் எதிர்வரும் ஜூலை மாதம் தனது நூற்றாண்டைக் கொண்டாட விருக்கின்றது. இதனைக் குறிக்கும் முகமாக தொல்லியல் திணைக்களம் தொகுப்பு நூல் ஒன்றினையும் வெளியிடவிருக்கின்றது.

இதுவரையிலும் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களிடமிருந்து தொல்லியல் சம்பந்தமான கட்டுரைகளை அனுப்புமாறு தொல்லியல் திணைக்களம் அழைப்பு விடுக்கவில்லை என 'திசை' அறிகின்றது.

தமிழும் உத்தியோக மொழியாக ஆக்கப்பட்டிருக்கும் இவ்வேளையிலும் கூட, இந்தப் புறக்கணிப்பு ஏன் என தொல்லியலில் தேர்ச்சி பெற்றுள்ள தமிழறிஞர்கள் கேட்கின்றனர். தொல்லியல் துறையில் தமிழரின் பங்களிப்பு திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்துள்ளதாகவும் இவ்வறிஞர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே இதுபற்றி கடந்த மாதம் 27ஆம் திகதி வெளிவந்த 'திசை'யில், ''தொல்லியல் நூற்றாண்டு விழா தமிழர் புறக்கணிப்பு விழாவாக அமையுமா?'' என்ற தலைப்புச் செய்தியை வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

## மேதினம் இன்னிசைமாலையாக மாறியது!

ஆளும் யு.என்.பி. கட்சியின் மேதினக் கூட்டம் இம்முறை, கொழும்பில் வெகு விமரிசையாக நடந்தது. மற்றெல்லாக் கட்சிகளினதும் மேதினக் கூட்டங்களோடு ஒப்பிடுகையில் யு. என். பி. யின் மேதினக் கூட்டத்திற்கே சனங்கள் அதிகம். புதினம் பார்க்கும் ஆவலோ அல்லது ஜே. வி. பி. யை முறியடித்ததால் ஜனாதிபதி மீது கொண்ட நம்பிக்கையோ என்னவோ சுமார் 5 லட்சம் மக்கள் காலிமுகத்திடலெங்கும் பரவி இன்ரர் கொண்ரினன்ரல் ஹோட்டல் வரைக்கும் திரண்டிருந்தார்கள்.

நண்பகல் 12 மணியளவில் சுகததாச விளையாட்டரங்கிலிருந்து ஆரம்பமாகவிருந்த யூ. என். பி. யின் மேதின ஊர்வலம், அதற்கும் ஒரு மணி நேரம் முன்னதாகவே ஆரம்பமாகியது. காரணம் அவ்வளவு சனம். அலங்கார ஊர்த்திகளில் ஒன்று ஜே. வி. பி. யின் அட்டகாசங்களைச் சித்திரிப்பதாக அமைக்கப்பட்டிருந்தது. இன்னொன்று, புலியும்,யானையும் இணைந்து நிற்பது போல் அமைக்கப்பட்டிருந்தது

### மே தினமும் சாராயமும்

மே தினத்திற்கு இரண்டு நாட்கள் முன்பாகவே கொழும்பில் சாராய விற்பனை தடை செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் ஊர்வலத்தில் நடமாடியவர்களின் கைகளில் சாராயப் போத்தல்கள் காணப்பட்டன. அதுமட்டுமல்லாமல் ஊர்வலத்திற்குப் பாதுகாப்பாக வந்த பொலிஸாருக்கும் வேண்டிய மட்டும் சாராயம் தரப்பட்டது.

### கையசைத்த நடிகை

மேதினக் கூட்டத்திற்கான மேடை கிட்டத்தட்ட 1,75,000 ரூபா செலவில் அமைக்கப்பட்டிருந்தது. விழாவில் விசேட விருந்தினர்களாக வந்திருந்தவர்களான சீன, இந்திய, ரஷ்ய நாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவரான தென்னிந்திய நடிகை, பிரமுகர்கள் பேசிக் கொண்டிருக்கையிலும் அதைப் பொருட்படுத்தாது மேடையிலிருந்தபடி தன் ரசி

(12ஆம் பக்கம் பார்க்க)

திசை
THISAI

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும். வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை:
ஒரு வருடம் - ரூபா; 300/-
அரைவருடம் - ரூபா: 150/-

இந்தியா:
ஒரு வருடம் - ரூபா: 350/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்பிளிக்கேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம். விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி :

118, 4ஆம் குறுக்குத்தெரு
த, பெ. 122,
யாழ்ப்பாணம்

# வல்வெட்டித்துறையில் நடந்த சம்பவம்

திசை'யின் இரசிகர்களில் நானும் ஒருவன். 27.04.90இல் உங்களது பத்திரிகையில் பொலிசாரின் அட்டூழியம் பற்றிய கட்டுரையைப்படித்தேன். தர்மதேவதையிடம் ஞானத்தைக் கற்ற 'நசிகேதனி'ன் புனைப்பெயரைக் கொண்ட எழுத்தாளரின் அரசியல் ஞானத்தை மெச்சுகிறேன்.




எழுதப்பட்டவை யெல்லாம் சிறப்பாக உள்ளது. எழுதப் படாதது குறையாக உள்ளது. குடாநாட்டில் நடந்த பொலிசாரின் அட்டூழியத்தில் 8.4.67 இல் வல்வெட்டித்துறையில் நடந்த சம்பவம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். அது தெரிந்தோ தெரியாமலோ கட்டுரையில் இடம்பெறாது போய் விட்டது. அன்று பொலிஸ் அதிகாரி பத்திரானாவின் துப்பாக்கிச் சூட்டினால் RVG நிறுவன உரிமையானர் திரு. இராமசாமிப்பிள்ளையின் மகன் சிவஞான சுந்தரம் உயிரிழந்தார். பருத்தித்துறை நாடாளுமன்றப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினமும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் படையினரால் வல்வை சனசமூக நிலையத்தில் வைத்துப் பூட்டப்பட்டனர். பொலீஸ் படையினரின் தாக்குதலில் பலர் காயமடைந்தனர். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், அவருக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டு பொலீசாரினாலும் படையினராலும் கேவலமாக நடத்தப்பட்டமை, நாடாளுமன்ற ஜனநாயக வழியிலே இப்பகுதி மக்களை நம்பிக்கை இழக்கச் செய்த முதலாவது பாரதூரமான சம்பவமாகும். இன்றைய விடுதலைப் போராட்டத் தளபதிகளாக விளங்குபவர்கள் பலர் அன்று சிறுவர்களாக இருந்தார்கள். அவர்களை ஆயுதப் போராட்டப் பாதையில் அடியெடுத்து வைக்கத் தூண்டியது இச்சம்பவமே எனலாம். இச்சம்பவம் நடைபெற்ற போது அதைக் கேள்விப்பட்ட திரு. மு. சிவசிதம்பரம் (உடுப்பிட்டி நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதிச் சபாநாயகரும்) உடனடியாக வல்வெட்டித் துறைக்கு விரைந்து சென்று படையினருடன் வாக்குவாதப்பட்டுப் பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினரையும் பொதுமக்களையும் விடுவித்தார். இவ்வாறான அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததொரு சம்பவம்'நசிகேத'னுடைய கட்டுரையில் இடம்பெறாததையிட்டு, நான் கவலை அடைகிறேன். இத்தவற்றைத் திருத்துவீர்களா என அன்புடன் வேண்டுகின்றேன்.

சத்தியகாமன்
பருத்தித்துறை.

## சிந்தனை மேடை — 4

### தொலைக்காட்சிக் கலாசாரத்தின் தாக்கம்

- ☐ நமது மரபுவழிக் கலாசாரத்தை தொலைக்காட்சி சீரழிக்கிறதா அல்லது செம்மைப்படுத்துகிறதா?
- ☐ மாணவர்களின் கல்வியை முன்னேற்ற உதவுகிறதா அல்லது பின் தள்ளுகிறதா?
- ☐ இதனால் சினிமா, நாடகம், நூல் வாசித்தல் போன்றவற்றில் நிகழ்ந்த மாற்றங்கள்.
- ☐ மொத்தத்தில் இதன் பயன்பாடுகள்; தீங்குகள்.

இவை போன்றவற்றை ஆராயும் கட்டுரைகளை, வாசகரிடமிருந்து எதிர்பார்க்கிறோம். அரைத்தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல், தெளிவான முறையில் அமைந்திருப்பவை மட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

### இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் அலுவலகம் தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல்

(1) பின்வரும் காலங்களில் இலங்கையில் வெளியான தமிழ் நூல்களிற் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்க எமது இராஜாங்க அமைச்சரின் அலுவலக தமிழ் அலுவல்கள் பிரிவு முடிவு செய்துள்ளது.

(i) 1981 முதல் 1988ஆம் ஆண்டின் முடிவுவரையான காலப்பகுதி (இது ஒரு காலப்பகுதியாகக் கருதப்படும்)

(ii) 1989ஆம் ஆண்டு

(2) கீழ்க்கண்ட துறைசார்ந்த நூல்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்

(i) நாவல் (ii) சிறுகதை (iii) நாடகம் (iv) கவிதை (v) இலக்கியத் திறனாய்வும் விமரிசனமும் (vi) சிறுவர் இலக்கியம் (vii) சமூகவியலும் மானிடவியலும் (viii) அறிவியல் (ix) ஏனையவை.

(3) நூல் எழுதியவர் இலங்கையராயிருப்பதோடு நூலும் இலங்கையில் அச்சிடப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

(4) இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சரின் அலுவலகச் செயலாளர் நியமிக்கும் மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளுக்கும், எடுத்துரைகளுக்கும் அமைய பரிசில்கள் வழங்கப்படும். செயலாளரின் முடிவே இறுதியும் முடிவுமானது.

(5) மேற்குறித்த காலங்களில் இலங்கையில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்ட நூலாசிரியர்களோ, வெளியீட்டாளர்களோ ஒவ்வொரு நூலிலும் ஐந்து பிரதிகளை கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிலோ, நேரடியாகவோ 21/05/90க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


பணிப்பாளர்,
தமிழ் அலுவல்கள் பிரிவு,
இந்துசமய கலாசார இராஜாங்க
அமைச்சரின் அலுவலகம்
9ஆவது மாடி, 'ரக்ஷண மந்திரய'
21, வொக்ஷால் வீதி, கொழும்பு - 02.

(6) நூல்களை அனுப்பும் உறையின் இடதுபுற மூலையில் ''தமிழ் நூற் பரிசுத்தேர்வு'' என்ற வாசகம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) இராஜாங்க அமைச்சரின் அலுவலக, தமிழ் அலுவல்கள் பிரிவினால் 1990 ஜுலை மாதத்தில் நடாத்தப்படவுள்ள தமிழ் இலக்கியப் பெருவிழாவில் பரிசுகள் வழங்கப்படும்

கே. சி லோகேஸ்வரன்
செயலாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்

கொழும்பு - 02
04/05/1990



அரியதோர் அன்பளிப்பு

தீயன எவையும் பார்த்திட வேண்டாம்
தீயன எவையும் பேசிட வேண்டாம்
தீயன எவையும் கேட்டிட வேண்டாம்
நீதிக்குரங்கவை நித்தமும் உணர்த்திடும்

நீலசோப் உறைகள் 100 நேரிலே கொடுத்து நீதிக் குரங்குகள் பெற்று நீர் மகிழ்வீர்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்

JAFFNA COLLEGE

ANNUAL PRIZE GIVING

The Annual Prize Giving of Jaffna College will take place on Monday the 21st May, at 4.00 p. m, in the College Quadrangle.

Chief Guests :
REV. DR. FRANCIS SOUNDARARAJ
Principal, Madras Christian College
and
MRS. CAROLINE SOUNDARARAJ, M. A.

Parents, Alumni and Friends are cordially invited.

S. JEBANESAN,
Principal.

நூல் தேட்டம்

இலங்கையில் வெளியாகும் தமிழ் நூல்களுக்கான வழிகாட்டி. நூல் வெளியீட்டுத் துறை தொடர்பான கட்டுரைகளையும் செய்திகளையும் தாங்கிவரும் காலாண்டிதழ். ஆண்டுச் சந்தா 40/-

தொடர்பு:
என். செல்வராஜா நூலகர்,
இவ்லின் இரத்தினம் நிறுவனம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

JAFFNA COLLEGE

Bunker Memorial Lectures 1990

The Rev. Dr. Francis Soundararaj,
Principal, Madras Christian College
will deliver
The Bunker Memorial Lectures
on the
23rd & 24th May, 1990 at 4.00 p. m.,
in the
Kailasapathy Auditorium, University of Jaffna.

Subject : "Spoken English for Literature"

Chairman : 23-5-1990 Mr A. Kadirgamar, Former Principal, Jaffna College.

Chairman : 24-5-1990 Mr. R. Sundaralingam, Director of Education, Jaffna.

ALL ARE CORDIALLY INVITED.

S. Jebanesan,
Principal.

# ஜே. ஆர்: நட்சத்திர நடிகர் அல்ல, எக்ஸ்ரா நடிகர்தான்!

ராஜன்

யப்பானுக்கும் இலங்கைக்கும் நல்ல உறவுகள் நிலவுவதற்குக் காரணம் யப்பானைப் பழிவாங்கக்கூடாது என 2ஆம் உலகப் போரிற்குப்பின் தான் சான்பிரான்சிஸ்கோ மகாநாட்டில் நிகழ்த்திய உரைதான் என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். அடிக்கடி கூறுவதுண்டு. அரை உண்மையைப் பல தடவைகள் கூறினால் அது வரலாற்று உண்மையாகி, தான் வரலாற்று நாயகனாகலாம் என அவர் நினைக்கின்றார் போலும்.

ஆனால் உண்மை நிலை என்ன?

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலேயே இலங்கையில் யப்பான் அதிகம் செல்வாக்குப் பெற்ற நாடாக விளங்கியது.

இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன: 1) ஏனைய ஆசிய நாடுகளைப் போல அல்லாது, யப்பான் 1870 ஆம் ஆண்டிலிருந்து அதிவேகமாகத் தன்னை நவீனமயப்படுத்தி, பொருளாதார அமைப்பைக் கைத்தொழில் மயமாக்கிற்று. 2) ஆசிய பௌத்த நாடாகிய யப்பான் 1906 இல் ஐரோப்பிய நாடாகிய சார் மன்னர்களின்ரஷ்யாவைப் படுதோல்வி அடையச்செய்து, மண்கவ்வ வைத்தது.

யப்பான் ஈட்டிய வெற்றி ஆசியாவில் தேசியவாத்திற்குப் பெரும் தூண்டுகோலாக அமைந்தது. இதுபற்றி லெனின் எழுதுகையில் ''முற்போக்குத்தன்மை வாய்ந்த ஆசியா படுபிற்போக்கான, பின் தங்கிய ஐரோப்பாவிற்கு மீளமுடியாத அடியைக் கொடுத்திருக்கின்றது'' எனக் குறிப்பிட்டார். மேற்கு நாடுகளின் ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போர் தொடுத்துள்ள ஆசியாவின் பிரதிநிதியாக யப்பான் கருதப்பட்டது என ஜவஹர்லால் நேரு பின்னர் இது பற்றி கருத்துத் தெரிவித்தார்.

யப்பானிற்கும் ரஷ்யாவிற்குமிடையில் நடைபெற்று வந்த யுத்தத்தை இலங்கை பௌத்தர்கள் மிக ஆர்வத்தோடு அவதானித்து வந்தனர். போர்க்களச் செய்திகளை மிக விரிவாக இங்குள்ள தினசரிகள் வெளியிட்டு வந்தன. பல இலங்கையர் யப்பானிற்கு ஆதரவு திரட்டுவதில் முனைப்பாகஈடுபடத்தலைப்பட்டனர். இவர்களுள் ஆபிரகாம் குறுப்பு (1868 — 1940) என்பவர் குறிப்பிடத்தக்கவர். அவர் பௌத்த இளைஞர் சங்கத்தினதும், இலங்கை சமூக சீர்திருத்த சங்கத்தினதும் முன்னணி உறுப்பினராக அப்பொழுது திகழ்ந்தார். அவர் ரைகம் கோரால கிராம மன்றின் தலைவராகவுமிருந்தார்: 1915 இல் நடைபெற்ற சிங்கள முஸ்லிம் இனக் கலவரங்களின் போது இவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

யப்பானிற்கும் ரஷ்யாவிற்குமிடையில் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போது யப்பானிற்கு ஆதரவாக குறுப்பு நிதி திரட்டினார் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் குறித்து யப்பானிய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அவருக்கு நன்றி தெரிவித்தது.

யப்பான் வென்றதும், இலங்கை மக்கள் மத்தியிலும் புத்திஜீவிகள் மத்தியிலும் மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கிற்று. கொழும்பிலே ஒரே கொண்டாட்டமும், வான வேடிக்கைகளும்! யப்பானிய தளபதிகளின் படங்களுக்கு பெரும் கிராக்கி: அப்பொழுது புறக்கோட்டையில் முன்னணிச் சிங்கள வர்த்தகர்களாக விளங்கிய என். எஸ். பெர்னான்டோ கம்பனியின் சொந்தக்காரர்கள் (அவர்கள் பௌத்த நடவடிக்கைகளில் முனைப்பாகச் செயற்பட்டு வந்தவர்களும் கூட) ஏறக்குறைய 15,000 படங்களை விற்பனைக்கு வைத்திருந்தனர்.

யப்பானைப்பற்றி எழுதிய விக்டர் கோரியா பின்வருமாறு சொன்னார்: ''யப்பானிற்கு ஆசியா செலுத்த வேண்டிய கடன் திருப்பிக் கொடுக்கப்பட முடியாத ஒன்று'' யப்பானிற்கு அடிக்கடி விஜயம் செய்து வந்த அனகாரிக தர்ம பாலா யப்பான் ஆசியாவிற்கு கலங்கரை விளக்காக உள்ளது என வர்ணித்தார். ஏனைய ஆசிய நாடுகள் மூடநம்பிக்கைகளாலும், மத வெறியர்களாலும், தெய்வங்களாலும் குருமார்களாலும், போதை வஸ்து பாவனையாலும் அறியாமையில் இன்னும் அமிழ்ந்திருக்கிறதென்றும் அவர் மேலும் கூறி, யப்பானிற்குப் புகழ்மாலை சூட்டினார்.

1906 இல் யப்பான் ஈட்டிய வெற்றியின் விளைவாக கீழைத்தேய நாடுகளிலே அமைதியின்மை அலை பரவுவதற்கு வழி கோலப்பட்டது என்று பிரித்தானிய அதிகாரிகள் — இங்கு கடமையாற்றிய பிரித்தானிய ஆளுநர் ஸேர் ஹென்ரி பிளேக் உட்பட — கருதினர். 1906 இல் இலங்கையில் நடைபெற்ற வண்டிக்காரர்களின் வேலை நிறுத்தமே இந்த வெற்றியின் எதிரொலி என்று கூட அவர்கள் நம்பினர்!

மேற்கூறிய வரலாற்று உண்மைகளிலிருந்து ஒன்று தெளிவாகின்றது: ஜே. ஆர் எவ்வளவுதான் தன்னை வரலாற்று நாயகனாகக் காட்ட முனைந்தாலும் வரலாறு என்னும் நாடகத்தில் அவரது பங்கு சிறியதே; யப்பான்— இலங்கை உறவைப்பொறுத்த வரை, அவர் 'நட்சத்திர' நடிகர் அல்ல வெறும் 'எக்ஸ்ராவே!

# அபகீர்த்தி மிக்க இந்திய அமைதிகாக்கும் படை

நசிகேதன்

1987ஆம் ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசு சர்வதேச அமைதிகாக்கும் படைக்கு வழங்கப்பட்டது. ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் பதட்டம் நிறைந்த யுத்த எல்லைகள் தோறும் எத்தகைய பிரசித்தங்களுமின்றிக் குருதி சிந்திய அமைதிகாக்கும் வீரர்கள் நோபல் பரிசினால் கௌரவம் செய்யப்பட்டார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கமான சர்வதேச அமைதிகாக்கும் படையும், ஐக்கிய நாடுகள் சபையைப் போலவே ஒரு கையாலாகாத படை என்றோ அல்லது வல்லரசுகளின் செல்வாக்கிற்குட்பட்ட படை என்றோ விமர்சிக்கப்படுவதும் உண்டு. இதில் உள்ளடக்கப்படும் வெவ்வேறு நாடுகளையும் சேர்ந்த துருப்புக்கள், அந்தந்த நாடுகளின் உளவு நிறுவனங்களைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடும் என்ற சந்தேகமும் நிலவுகிறது. ஆனாலும் இத்தகைய தனித்தனி நாடுகளின் ராஜதந்திர நலன்களிற்கும் அப்பாலான சர்வதேசத்தன்மை யொன்று அமைதி காக்கும் படைக்கு உண்டு. அமைதிகாக்கும்படை வீரர்களின் பின்னணி மர்மமானதாயிருக்கலாம், அவர்கள் அமைதிகாக்க வந்ததன் நோக்கம் சந்தேகத்திற்குரியதாயிருக்கலாம். ஆனால் ஒரு அமைதிப்படை என்ற வகையில் வகுக்கப்பட்டுள்ள மேன்மையான அடிப்படைகளை அவர்கள் அநேகமாகப் பேணியிருக்கிறார்கள் என்பதும், அவ்வாறு பேணியதில் அவர்கள் உயிரைக் கொடுத்துமிருக்கிறார்கள் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

லெபனானிலேயே சர்வதேச அமைதிப்படை வீரர்கள் மிகக் கூடுதலாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு லெபனானில் அமைதிப்படையினர் நிலைகொண்டிருந்த 7 மாடிக் கட்டடம் ஒன்றை முஸ்லிம் கெரில்லாக்கள் குண்டு வைத்துத் தகர்த்தார்கள். இத்தாக்குதலில் அமெரிக்கர்களான 216 அமைதிப்படை வீரர்களும், ஃபிரெஞ்சுக்காரரான 22 அமைதிப்படை வீரர்களும் மாண்டு போயினர். அரபுக்களிற்கெதிரான இஸ்ரேலுடன் அமெரிக்காவும், பிரான்சும் கொண்டிருந்த சிநேகம் காரணமாக ஆத்திரமடைந்த முஸ்லிம் கெரில்லாக்கள் அமைதிகாக்கும் படையாக வந்த அமெரிக்க, பிரெஞ்சு வீரர்களைத் தீர்த்துக் கட்டினர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தோடு உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை தனது முதலாவது அமைதி பேணும் நடவடிக்கையில் 1948 இல் ஈடுபட்டது. 1948 இல் யூதர்கள் இஸ்ரேல் என்ற புதிய தேசத்தை உருவாக்கியதோடு எழுந்த பலஸ்தீனர்கள் பிரச்சினையில், அரபுக்களிற்கும் யூதர்களிற்கும் இடையிலான யுத்த நிறுத்தத்தை அவதானிக்க, ஐக்கியநாடுகள் சபை தனது அமைதியை அவதானிக்கும் (ராணுவ அவதானிகள்) குழுவை அங்கு அனுப்பியது.

அமைதியைப் பேணுதல் அல்லது அமைதியை உருவாக்குதல் என்ற அடிப்படைகளிலான ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான முயற்சிகளின்போது பெரும்பாலும் யுத்த நிறுத்தத்தை அவதானிப்பதே அமைதிப்படையின் முக்கிய செயற்பாடாயிருந்து வருகிறது. இவ்வாறு யுத்த நிறுத்தத்தை அவதானிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச ராணுவ வல்லுனர் அடங்கிய அவதானிகள் குழுவை அனுப்பும் அல்லது சர்வதேச அமைதிகாக்கும் படையை அனுப்பும்.

இந்த வகையில் 1948 இல் பலஸ்தீனத்திற்கும், அதே ஆண்டு இந்திய பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் சர்வதேச ராணுவ அவதானிகள் பணிபுரிந்திருக்கிறார்கள். பின் 1952 - 54 வரை கிரீசிற்கும் இத்தகைய அவதானிகள் குழு அனுப்பப்பட்டது. இடையில் 1950 இல் வட - தென் கொரியாக்களிற்கிடையிலான பதட்டத்தின் போதும் சர்வதேச ராணுவ அவதானிகள் அனுப்பப்பட்டார்களெனினும் அந்த நடவடிக்கை கூடுதலாக அமெரிக்கச் சார்பானதாகவே இனங்காணப்பட்டுள்ளது தொடர்ந்து 1956 இல் சுவெஸ் கால்வாய் தொடர்பாக, எகிப்தோடு, பிரிட்டனும், பிரான்சும் மோதியபோது ஐக்கிய நாடுகள் சபையின் அவசர அமைதிகாக்கும் படை அங்கு அனுப்பப்பட்டது. 1956 - 1967 வரையிலும் அமைதிப்படை அங்கு நிலைகொண்டிருந்தது. இது போலவே ஆபிரிக்க நாடாகிய கொங்கோவிலும், உள்நாட்டு யுத்தத்தின் போது 1960 - 61 வரை அமைதிப்படை பணிபுரிந்தது. மொத்தம் 36 நாடுகள் கொங்கோவிற்கான அமைதிப்படைக்குத் தங்கள் அங்கத்தவர்களை அனுப்பியது குறிப்பிடத்தக்கதாகும். சைப்பிரஸ் பிரச்சினை உக்கிரமடைந்து துருக்கி தன் துருப்புக்களை அங்கு அனுப்பியதைத் தொடர்ந்து 1964 இல் சர்வதேச அமைதிப்படை அங்கு நிறுத்தப்பட்டது. இவ்வாறு 1948 இலிருந்து இன்று வரை சர்வதேச அமைதிப்படை, நாடுகளில் உள்நாட்டுக்குழப்பங்களின் போதோ, அல்லது எதிரிகளான இரு நாடுகளின் எல்லைகளிலோ பொறுப்போடு செயற்பட்டிருக்கிறது. ஆபிரிக்காவின் அங்கோலா, நமீபிய எல்லைகளிலும், 1988 இலிருந்து ஈரான் ஈராக் எல்லைகள் நீளத்திற்கும் அமைதிப்படை இன்றும் நிலைகொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினால் ஒரு அமைதிப்படைக்கென வகுக்கப்பட்ட விதிகளின்படி, யுத்த நிறுத்த எல்லைகளில் அமைதியை அவதானிக்கலாம் அல்லது மேற்பார்வை செய்யலாம். தவிர சம்பந்தப்பட்ட இருதரப்பினரதும் சம்மதத்துடன் அவர்கள் குறுக்கு விசாரணைகளிற்கோ அல்லது தகவல் சேகரிக்கும் நடவடிக்கைகளிற்கோ ஒத்துழைக்கலாம். யுத்தத்திற்கேதுவான விரோத உணர்வுகள் கொண்ட இருசாராருக்கும் இடையில் (எந்த அணிக்கும் சாய்வாகவே, பகையாகவோ இராத) நடுநிலையான பாத்திரத்தையே அமைதிப்படை வகிக்க முடியும்.

பெரிய அளவில் சேதங்களை விளைவிக்கக்கூடிய கனரக ஆயுதங்களை அவர்கள் கையாள முடியாது. எளிமையான ஆயுதங்களை அதுவும் தற்காப்புக் காரணங்களிற்காகவே அவர்கள் அவற்றைப் பாவிக்கலாம். இந்த வகையில், ஒரு அமைதிப்படை, தன் போர்த்திறனைப் பிரயோகிப்பதிலும், கையாளக் கூடிய ஆயுதங்களைப் பொறுத்த வரையிலும் வரையறைக்குட்பட்ட ஒரு படையே.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மார்க்சுடன் பிரத்தியேகப் பேட்டி —

# 1989இல் மார்க்சியவாதத்தின் கொப்பூழ்க்கொடி வெட்டப்பட்டது

— மார்க்ஸ்

□ ஜே. ராஜ் □

பத்திரிகை எழுத்தாளர் என்றால் கற்பனை வளமற்றவர்கள், படைப்பாற்றலற்றவர்கள் என்ற ஒரு கருத்து பொதுவாக நிலவுகிறது.

இக்கருத்தைத் தவிடுபொடியாக்கும்வகையில், மேற்குநாடுகளிலே — குறிப்பாக அமெரிக்காவில் — 'நியூஜேர்ணலிசம்' வளர்ந்து வேரூன்றியிருக்கின்றது. படைப்பிலக்கியத்திற்கே உருத்தென முன்புகருதப்பட்ட நனவோடை, பாத்திரம் சார்ந்து நோக்குக் கோணம் போன்ற உத்திகளை இவர்கள் மிக லாவகமாகவும், வெற்றிகரமாகவும் கையாளத்தொடங்கியுள்ளனர். இது பற்றி மேலும் அறியவிரும்புவர்கள் ரொம் வூல்வைத் தொகுப்பாசிரியர்களில் ஒருவராகக் கொண்ட 'நியூ ஜேர்ணலிசம்' என்ற ஆங்கிலத் தொகுப்பைப் பார்க்கவும்.

பீடிகையை இத்துடன் நிறுத்தி விஷயத்திற்கு வருகிறேன்.

மார்ட்டின் ஜாக்ஸ் என்பவர் மார்க்சிசம் ருடேயின் ஆசிரியர். இன்று கொம்யூனிச உலகிலே நடைபெற்றுவரும் பாரிய மாற்றங்களைப் பற்றி தத்துவார்த்தரீதியான நீண்ட கட்டுரை ஒன்றினை எழுதுவதைத் தவிர்த்து; ஓர் படைப்பிலக்கியக் காரரைப்போன்று தனது கற்பனையையும் மார்க்சின் கோட்பாட்டுக் கருத்துக்களையும் நன்கு இணைத்து, மார்க்சைப் பேட்டி கண்டுள்ளார்.

இப்படித்தான் அந்தக் கற்பனைப் பேட்டி தொடங்குகிறது: ''கதவை யாரோ தட்டும் ஒலி. 'உள்ளே வாங்கோ' என்றேன். நான் எதிர்பார்த்திருந்த கணப்பொழுது வந்து விட்டது. நான் எதிர்பார்த்ததைவிட அவர் சற்று குட்டையாக இருந்தார். ஆனால் கவர்ச்சி குன்றவில்லை. நீண்ட மயிர் பெரும்பாலும் நரைத்து விட்டது. தாடி; அவரது நிறம் நான் கற்பனைபண்ணியிருந்ததைவிட சற்று கறுப்பாகவிருந்தது. ஆசனத்தில் அமரும்படி கூறி, பேட்டிக்கு நேரம் ஒதுக்கியமைக்கு நன்றி தெரிவித்தேன். அவர் தனது தோள் பட்டைகளை உலுப்பினார். 'ரேப்றெக்கோடரை' புரியாத புதிர்போல் நோக்கிய அவர், பேட்டியை ஆரம்பிப்பதற்கு எனக்காகக் காத்திருந்தார்.''

இவ்வாறு தொடங்கிய பேட்டியின் முக்கிய பகுதிகளை இங்கு தருகின்றேன்: கே: திருவாளர் மார்க்ஸ் அவர்களே, 1848இல் புரட்சி வெடிக்கவிருந்த தறுவாயில் நீங்கள் கொம்யூனிச பிரகடனத்தில் பின்வருமாறு எழுதினீர்கள்: 'ஐரோப்பாவை அச்சுறுத்தும் ஆவிஒன்று உலவிவருகின்றது— கொம்யூனிசத்தின் ஆவி, இப்பொழுது ஐரோப்பாவை அச்சுறுத்தும் ஆவி முதலாளித்துவம் போல் தோன்றுகிறதே.

1989இல் நடைபெற்றவற்றை நான் விளக்கத்தொடங்கினேன். சற்று பொறுமையிழந்தவராய் மார்க்ஸ் குறுக்கிட்டு இடைநிறுத்தி ''எனக்குத் தெரியும். எனக்குத் தெரியும். நிகழ்ச்சிகளை நான் அவதானித்து வருகின்றேன். வாசிகசாலையில் இருக்கும்போது நான் நித்திரை கொள்வதில்லை'' என்றார். நிகழ்காலச் செய்திகள் அவருக்கு நன்கு பரிச்சயமாகவிருந்ததால், நான் கேட்கவிருந்த கேள்விகளை அவசரம் அவசரமாக மாற்றியமைத்தேன்.

கே: 1989ஐப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? கொம்யூனிசத்திற்கு முடிவு காலம் வந்து விட்டதா?

ப: மிகக் கவர்ச்சிகரமானது, குறிப்பிடத்தக்க ஆண்டு அது. சில அம்சங்களில் அது 1848 ஐ ஒத்தது. ஒரேநேரத்தில் எத்தனையோ நாடுகளில் எதிர்ப்புக்கள் யாவற்றையும் தாண்டிய வெகுஜன இயக்கம். ஆனால் இந்தமுறை இந்தப் புரட்சிகள் தொடர்ந்து உயிர் வாழக்கூடும். அவை ஜனநாயகத்திற்கான புரட்சிகள். 1989 ஆம் ஆண்டு 1917 ஆம் ஆண்டை முடிவுக்குக்கொண்டு வருகின்றதென நினைக்கிறேன். ரஷ்யப் புரட்சி யுகத்தின் முடிவை இது குறித்து நிற்கிறது. ரஷ்யப் புரட்சி தோல்வியுற்று விட்டது என நினைக்க வேண்டியுள்ளது.

அவரது பெயரால் நடைபெற்றவற்றில் பெரும்பாலானவற்றைத் தூக்கி எறிவதற்கு மார்க்ஸ் தயாராகவிருந்ததைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''ஆனால் 1860களின் பிற்பகுதியிலிருந்து நீங்களே ரஷ்யாவிலேதான் புரட்சி பெரும்பாலும் நிகழும் என எதிர்பார்த்தீர்களே'' என்றேன்.

ப: ரஷ்யப் புரட்சி மேற்கு நாடுகளில் பாட்டாளிவர்க்கப் புரட்சிக்குசமிக்ஞையாக இருக்கக்கூடும் என எங்கல்சுடன் கூடி நான் எழுதினேன். அப்பொழுது இரு புரட்சிகளும் ஒன்றை ஒன்று நிறைவு படுத்தும் என நினைத்தோம். அது கிட்டத்தட்ட நடந்தது. முதலாம் உலகப் போரிற்கு உடன் பின் வந்த ஆண்டுகளில் எத்தனையோ ஐரோப்பிய நாடுகளில், ஜேர்மனியிலும் கூட, புரட்சி வெடிப்பதற்கான அறிகுறிகள்தென்பட்டன. ஆனால் புரட்சி நடைபெறவில்லை. அதனால் ரஷ்யா தனித்துநிற்க வேண்டியிருந்தது. அந்த நாட்டிலோ பாட்டாளி வர்க்கத்தின் தொகைமிகச்சிறியது, ஜனநாயக மரபோ அறவே இல்லை. கொடூரம்மிக்க, அதிகாரித்துவ ஆட்சிக்கு மிக உகந்த சூழ்நிலை. இதுதான் அங்கு நிகழ்ந்தது. விடுதலை தன்னைத்தானே ஆளுதல், பெரும்பான்மைஎன்றெல்லாம் நாம் சோசலிசம் பற்றி மனதில் உருப்போட்டிருந்தோம். ஆனால் நடைபெற்றதோ இதற்கெல்லாம் நேர்மாறானவை மக்களின் பெயரில் நடைபெற்ற சோசலிசம் மிகக் குறுகிய சிறு தொகையினரின் கைகளிலேயே சிக்குண்டிருந்தது.

கே: ஆனால் உங்கள் பெயரில், உங்கள் எண்ணங்களைக் கையாண்டு தானே இது நடைபெற்றது?

(9ஆம் பக்கம் பார்க்க)

# ஆரியரட்ணவின் சர்வோதயத்திற்குள் பேரினவாதமா?

□ சுமந்திரன் □

இலங்கையைச் சேர்ந்த சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி, ஆரியரத்தினா அவர்கள் 1984 ஒக்ரோபரில் அமெரிக்காவில் வெளியாகிய பௌத்தமத இதழொன்றிற்கு பேட்டியளித்திருந்தார் சுமார் ஐந்து ஆண்டுகள் சென்ற பின்பு அப்பேட்டி சர்வோதயச் சிரமதான இயக்கத்தின் இதழில் (Dana - December 1989) மறுபிரசுரம் செய்யப்பட்டது. அப்பேட்டியில் 1983 இல் இடம் பெற்ற இலங்கை இனக்கலவரம் பற்றிய கேள்விக்கும் கலாநிதி ஆரியரத்தினா பதிலளித்திருந்தார்.

''பௌத்த சிங்களவர் தமிழ் இந்துக்களைக் கொல்கிறார்கள் என்று கூறி இலங்கைக்கு வெளியே மிகுந்த பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இது ஒரு முழுப்பொய் (an absolute lie). அங்ஙனம் எந்த ஓர் இந்துவையும் பௌத்தர் எவரும் கொல்லவில்லை'' என ஆரியரத்தினா கூறினார். தொடர்ந்து அவர், ''ஒரு புத்தபிக்குகூட அல்லது மதிப்பானவர் எனக்கூறக்கூடிய ஒரு பௌத்தர்கூட இந்த அழிவு வேலைகளில் ஈடுபடவில்லை'' என வலியுறுத்தினார். இலங்கைத் தமிழ் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் பெருமளவில் காவு கொண்ட 19‿3 தமிழினப் படுகொலைகள் பற்றி அறிந்தவர்களுக்கு கலாநிதி ஆரியரத்தினா அவர்களின் இத்தகைய கூற்றுகள் மிகுந்த வியப்பையும் அதிர்ச்சியையும் அளிக்கும். அப்போதைய தமிழினப் படுகொலைகளுக்கு யார் ஆக்கமும். ஊக்கமும் அளித்தார்கள் என்பதையறிந்த எவரும் இத்தகைய அப்பட்டமான பொய்யைக் கூறமாட்டார்கள். அதனை வெறுமனே சட்ட விரோதக் கும்பல்களின் வேலை எனக்கூறி பொறுப்பிலிருந்துஎவரும் தப்பமுடியாது.

வடக்கில் பயங்கரவாதிகள் எனப்படுவோரால் பல கொலைகள் செய்யப்பட்டன. சுமார் 89 அல்லது 90 ஆயுதப்படையினர் இந்த வன்முறையாளர்களால் கொல்லப்பட்டனர். இக்கொலைகளைக் காரணம் காட்டி சிங்கள மக்கள் இச்சேதங்களைத் தடுக்காது விட்டனர். அல்லாவிடில் சிங்களவர்களே முன் வந்து இவற்றைத் தடுத்திருப்பர் எனத் தொடர்ந்து வரும் பகுதியில் திரு. ஆரியரத்தினா விளக்கியுள்ளார்.

1983 யூலை இனக்கலவரம் தோன்றக் காரணமாகவிருந்த சம்பவமாகச் சுட்டிக் காட்டப்படுவது திருநெல்வேலியில் புலிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலே. இதில் 13 இராணுவ வீரர்கள் மட்டுமே மரணமடைந்தனர். எனவே திரு. ஆரியரத்தினா அவர்கள் குறிப்பிடும் 89 அல்லது 90 என்ற எண்ணிக்கை எங்ஙனம் பெறப்பட்டதோ தெரியவில்லை. தவிர ஆயுதப்படையினரின் மரணத்திற்குப் பழிவாங்கும் பொருட்டு ஆயுதம் ஏந்தாத அப்பாவித் தமிழ்மக்கள் பலர் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டதை எப்படி நியாயப் படுத்தமுடியும்?

ஆயுதப்படையினரை வடபகுதிப் பயங்கரவாதிகள் கொன்றமையினால் சிங்கள மக்கள் கலவரத்தைத் தடுக்காது விட்டனர் எனக்கூறும் திரு. ஆரியரத்தினா அவர்கள் 1983 க்கு முன்பு நடந்த பல தமிழினப் படுகொலைகளுக்கு என்ன காரணம் கூற முடியும்? அவற்றை ஏன் சிங்கள மக்கள் தடுக்கமுயற்சிக்கவில்லை?

1958 ஆம் ஆண்டு இனக்கலவரங்களுக்குப்பின் திரு. வில்மட் ஏ. பெரேரா, முன்னாள் ஆனந்தாக்கல்லூரி அதிபர் திரு எஸ். ஏ. விஜயதிலகா போன்ற சிங்கள பெருமக்கள் தமதின மக்களைக்கண்டித்தும் அவர்கள் செய்த தவறுகளுக்காக தமது மனவருத்தத்தையும் வெட்கத்தையும் தெரிவித்தனர். அதனை ஈடுசெய்ய தம்மாலியன்றதை மிகுந்த நல்லெண்ணத்துடன் செய்தனர். ஆனால் இனமத பேதங்களைக்கடந்து எல்லாமக்களினதும் உயர்வுக்காகப் பாடுபடும் சர்வோதய இயக்கத்தின் தலைவராக விளங்கும் கலாநிதி ஆரியரத்தினா அவர்களோ தமதினமக்களின் தவறுகளை மூடிமறைக்க முயல்கிறார். சத்தியசோதனை செய்த மகாத்மா காந்தியின் சர்வோதய வழியில் செல்வதாகக்கூறிக்கொள்பவர் இங்ஙனம் சத்தியங்களைப் புறக்கணிப்பது ஏன்? சத்தியத்தையே கடவுளாகக் கருதியவர் காந்தியண்ணல். அதனால் தவறுகளை ஒப்புக்கொள்வதும் உண்மைகளை ஏற்றுக்கொள்வதுமே காந்தியின் வாழ்க்கை நெறியாக இருந்தது. சத்தியத்தின் பூரண அர்த்தத்தையுணர்ந்து அதற்காக வாழ்வை அர்ப்பணித்தவர் அவர். எங்ஙனமாயினும் சத்தியத்தைப் பேணும் அர்ப்பணிப்புணர்வு இல்லாவிடின் உன்னதங்களை நாம் அடையமுடியாது. சத்தியத்தன்மை எல்லாவற்றிற்கும் அடிப்படையானது. ஆனால் காந்தியின் வழியில் செல்வதாகக் கூறிக்கொள்பவர்களிடம் இந்தத் தெளிவு தரிசனம் இன்மையால் அவர்களின் முயற்சிகள் வெறும் ஆரவாரமாக நின்று விடுகின்றன. சர்வோதயம் மூலம் நாம் முதலில் உயரவேண்டும்; உன்னத நிலையை அடைய வேண்டும் அதன் மூலமே ஏனையோரையும் உயர்த்தும் வல்லமை நமக்கு வரும்.

இந்தச் சிங்கள பேரினவாத உணர்வு சர்வோதயப் பிரமுகர்களிடையே இங்ஙனம் ஊறியிருப்பின் ஏனைய சிங்கள மக்களிடம் எந்த அளவுக்கிருக்குமென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே ஒரு சிறுபான்மையின மக்கள் என்றவகையில் மிக விழிப்பாக நாம் நடந்து கொள்ள வேண்டும்.

# நேசக்கரங்கள் நீண்டு வெடித்த பீரங்கிகள்

தூரதர்ஷன் இரவு 9.15இலிருந்து 11.00மணிவரையிலும் தமிழ் நிகழ்ச்சிகளை விசேஷமாக ஒளிபரப்பியது. ஆகாசவாணி காலை 7.00 மணியிலிருந்து 7.15 வரையிலும் நேசக்கரம் என்றொரு நிகழ்ச்சியையும் பிற்பகல் 2.30 இலிருந்து 3.50வரை, அன்பு வழியென்ற நிகழ்ச்சியையும், பின்னேரம் 5.30இலிருந்து 6.00மணிவரை வெற்றி மாலை என்றொரு நிகழ்ச்சியையும்ஒலிபரப்பியது. தவிர, தூரதர்ஷனும் ஆகாசவாணியும் அவற்றின் மாநில, முழு இந்தியச் செய்திகளின் போதும் இலங்கையில் நடந்து கொண்டிருந்த போரைப் பற்றிப் புனைந்து கூறின.

தமிழரைப் பிரிக்கும் 'இந்தக் கபடமான பிரச்சாரப் போரின்' ஒருபகுதிதான், கொங்கிரஸ் அல்லாத அரசியல்வாதிகளை அல்லது வேறு பிரமுகர்களை மேடைகளில் ஏற்றியோ அல்லது தொலைக்காட்சிக்கு முகம் கொடுக்கச் செய்தோ அவர்களின் கர்ஜனைகளால், இந்திய தேசபக்தியை, இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கெதிராகக் கிளறி விடுவதாகும். இந்த, இந்திய தேசபக்தர்கள் இமய மலையின் சிகரத்தில் ஏறிநின்று, இந்து மகா கடலை நோக்கி, கர்வத்தோடும், உரிமையோடும் புத்திமதிகள் சொன்னார்கள். போதனை செய்தார்கள்

இந்தியத் துருப்புகள், இலங்கையில் போரிலீடுபட்டிருந்த காலம், ராஜீவ் அரசு மேற் கொண்ட தோல்வியுற்ற உத்திகளில் ஒன்றுதான், இலங்கைத் தமிழரிலிருந்து இந்தியத் தமிழரைப் பிரித்துக் கையாண்ட முயற்சியாகும். இந்த வகையில் தமிழரைத் தமிழருக்கெதிராகத் திருப்பும் முயற்சியில் ராஜீவ் அரசு தன் சகல அரச பிரசார வசதிகளையும் பாத்விதது. தமிழர்களிற்கு இவர்கள் சொன்னபொய்கள் அசிங்கமானவை, அசட்டுத்தனமானவை.

இவ்வாறு தமிழரைப் பிரிக்கும் சதிக்குத் துணைபோன, ம.பொ.சி., சோ.கல்யாணசுந்தரம்... போன்றோரில் ஒருவரே இடதுசாரியும், இயலாதவருமான எழுத்தாளர் ஜெயகாந்தன் ஆவர்.

மதுரை தேசிய தமிழ் இளைஞர் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த, இலங்கை — இந்திய ஒப்பந்தம் பற்றிய விளக்கப் பொதுக் கூட்டத்தில் அவர் பேசிய பேச்சு, 1988இன் முற்கூறில் நேசக்கரம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகியது.

கண்களிற்குத் தெரியாத யாரோ ஒரு எதிரியை நோக்கி ஜெயகாந்தன் வசனங்களைக் கூர்தீட்டி வீசினர். சண்டித்தனங்கலந்ததிமிரோடும், அசட்டுத்தனமான கோபத்தோடும் ஜெயகாந்தன் பேசினர். அவருடைய குரல் கரடு முரடாக வெறியிலிருப்பவனுடையதைப் போல் இருந்தது. அவருடைய பேச்சு வருமாறு:

*தொகுப்பு: நிதர்சன்*

இலங்கையை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்று இந்தியா ஆசைப்பட்டதா? அங்கேயிருந்து ஒருபிடி மண்ணையேனும் அள்ளிக்கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் இந்திய இராணுவத்திற்கு உண்டா?...... உலகத்திற்குத் தெரியும் மெய்யாக அங்கே என்ன நடந்தது?...... அங்கே பேரினவாதமும், அதைஎதிர்த்துப் பிரிவினைவாதமும் தலைதூக்கி நின்றன. வன்முறை தலைவிரித்தாடியது. நாகரிக வாழ்க்கைக்கு அங்கே இடமேயில்லை என்று தீர்மானமாயிற்று. அது கொலைக்களம் போலவும், சித்திரவதைக் கூடம்போலவும் அந்த யாழ்பாணப் பகுதி பல ஆண்டுகள் துன்புறுத்தப்பட்டது. நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். ...... அண்டை நாடாயிற்றே? அங்கே தீப்பிடித்தால் இங்கே அனலடிப்பது உண்மைதான். அங்கே தாக்குதல் நடந்தால் அவர்கள் கடல் தாவி இங்கே வந்து விழுவது உண்மைதான். எனினும் ஒரு அண்டை நாட்டு விவகாரமாயிற்றே என்றுநாம் கொஞ்சம் அணுகாது காத்திருந்தோம்.

நாம் என்ன செய்யலாம்? பக்கத்திலே பெரிய நாடு...... மகத்தான ஏகாதிபத்திய வைரி ...... காலனியாதிக்கத்தின் பகைவன்...... உலக சமாதானத்தின் நண்பன்...... யுத்தத்தின் பரம வைரி...... அகிம்சையின் சீடன்...... இப்படியான ஒரு மாபெரும் நாடு, பல இன்னல்களுக்கிடையே, வெளிநாட்டு உள்நாட்டுத் துரோகிகளை யெல்லாம் சந்தித்துக் கொண்டு, மேலும் மேலும் ஜனநாயக சுதந்திர வாழ்க்கையில் வீறுநடை போட்டு, சர்வதேசப் பலகணியில், உலகமெல்லாம் கரகோஷம் செய்ய, உன்னதமாக நின்றிருக்கும் ஒரு நாடு எவ்வளவு நாட்களிற்கு இதைக் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? அது நம்மைப் பாதிக்காமலிருந்தாலும் பரவாயில்லை. அங்கேதுன்பப்படுகிற மக்கள் லட்சக் கணக்கிலே இங்கே வந்து விழுகிறார்கள். அவர்கள் கொதித்திருக்கிறார்கள். எனவே அவர்களிற்கு நாம் அன்பு காட்டினோம்; ஆறுதல் தந்தோம்; ஆதரவளித்தோம்.

நாம் ஆக்கிரமிக்கப் போனவர்கள் அல்ல. எந்த ராணுவமாவது தகப்பன் கைமீறிப் போன குழந்தையைக் கெஞ்சுகிற மாதிரி, கண்ணா அல்ல, பொன்னு அல்ல, என்மகனே, என்கண்ணே, கொடுத்துர்றா துப்பாக்கிய...... உனக்கு மிட்டாய் தர்றேன்டா உனக்கு வேலைதர்றேன்டா, உன்ன நல்லாப் படிக்கவைக்கிறேன்டா, கண்ணே அந்தத் துப்பாக்கியக் குடுத்துர்றா...... என்று, தகப்பனைப்போல் கேட்கிற ராணுவத்தை எங்கேயாவது பார்த்ததுண்டா? தகர்ப்பதற்கும், இடிப்பதற்கும், தவிடு பொடியாக்குவதற்கும்தான் உலகத்து ராணுவங்களுக்குத் தெரியும். எங்கள் ராணுவத்திற்குத் தகர்ந்த பாலங்களைக் கட்டுவதற்கும், கிடந்த வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கும், இருண்டு போன நகரங்களிற்கு வெளிச்சம் தருவதற்கும், ஓடாத சக்கரத்தை உருட்டுவதற்கும், எரியாத தீபத்தை ஏற்றுவதற்கும், மூடிக்கிடக்கிற பள்ளிகளைத் திறப்பதற்கும், முடங்கிக் கிடந்த பிள்ளைகளையெல்லாம் தேர்வு எழுத வைப்பதற்கும் எங்கள் ராணுவத்திற்கல்லாமல் வேறெந்த ராணுவத்திற்குத் தெரியும்?...... (சனங்கள் ஆர்ப்பரித்துக் கைதட்டுகிறார்கள். ஜெயகாந்தன் உணர்ச்சி வசப்பட்டு, குரல் நெகிழ்ந்து போய்ப் பேசுகிறார்......) பாரதப் பிரசை என்ற முறையில் என்றுமில்லாதவாறு இன்று இறும்பூதெய்துகிறேன்... (தொடர்ந்து குரலில் கோபம் ஏறுகிறது...... ஜெயகாந்தன் ஆவேசமடைகிறார்......) இது பஞ்சசீலம் படைத்த ராணுவம், பாரதத்திலிருந்து புறப்பட்ட ராணுவம்...... பண்டித நேரு கட்டிக் காத்த ராணுவம்...... இந்திராகாந்தியின் இணையற்ற புதல்வர்கள் சேர்ந்து காத்து நின்ற பராதம்......எங்கள்மீது என்ன பழி சொல்வது? என்று உன் புன்புத்திக்குப் புரியாது... எனவே இதனை மக்கள் செவிமடுக்க மாட்டார்கள். ஆகவே இந்த ராணுவம் அங்கே ஆக்கப் பணிபுரியப் போயிருக்கிறது. அங்கே இலங்கைப் பொருளாதாரத்தையும், யாழ்ப்பாணப் பொருளாதாரத்தையும் கட்டிநிமிர்த்தப் போயிருக்கிறது. இது ஒரு ஆக்கபூர்வமான சேவை. எனவே தான் அமைதி காக்கும் படை என்று இதற்குப் பெயர்.

ஆகவே அவர்கள் அங்கே துன்புறுவதும் நூற்றுக் கணக்கில் கொல்லப்படுவதும், மெய்யாகவே எங்கள் உள்ளத்தைப் பொங்கவும், எங்களுடைய கோபத்தைக் கொதித்தெழவும் செய்கிறது. இருப்பினும், போர்க்களத்தே நின்றிடும் பொழுதும் உளப் பொங்கலில்லாத அமைதி, மெய்ஞ்ஞானம் என்று அறிவித்த பாரம்பரியத்தில் வாழ்கின்ற நாங்கள்...... என்று பாரதப்படை அங்கு காட்டி நின்று சமர்புரிகிறது.

பயங்கரவாதம் முற்றிலும் அங்கே புதைகுழிக்கு அனுப்பப்படும்வரை, யாழ்நகரிலே தமிழன் நிம்மதியாக நான் வாழ்கிறேன் என்று இந்தியாவுக்கு நன்றி சொல்லி, பிரியாவிடை தந்து நம்மைக்கட்டித் தழுவி, அனுப்புகிறவரை நாம் அங்கிருந்து வரமுடியாது.

## மாயா சக்தி — நாடக அரங்கப் பயிற்சிக் களம்

மாயா சக்தி என்பதுஒரு நாடகக் கல்லூரி. இது பல இன மொழி, கலாசாரங்களின் அடிப்படைகளிலிருந்து வரும் நாடகவியலாளர்களால் வழி நடாத்தப்படும். இது நாடகத் துறையில் ஈடுபட்டவர்களது அனுபவத்தையும் அறிவையும் பெருக்கும் நோக்குடன், ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரதான குறிக்கோள்கள் வருமாறு:

1. இலங்கையில் வாழும் பல்வேறு பண்பாட்டுக் குழுக்களுக்கிடையேயிருக்கும் பொதுமக்களை அரங்கம் வாயிலாக வெளிப்படுத்தல்.

2. பிறநாட்டு நாடகத் துறையினரை வரவழைத்து அவர்களது அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளல்.

3 இனங்களுக்கிடையிலான கூட்டுப் படைப்பாற்றலை வெளிப்படுத்தல்.

4. இப்பயிற்சிக் களத்தில் பெறும் அனுபவத்தையும் அறிவையும், ஏனைய பகுதிகளுக்கும் பயிற்சிக்களங்கள் மூலம் பகிர்தல்.

இப்பயிற்சிக்களமானது இன்கா மேயர், கிறிஸ்தோபர் கொனலி (ஜேர்மனிய அவுஸ்திரேலிய நிபுணர்), பராக்கிரம நிரியெல்ல, எச். ஏ. பெரேரா, மானெல் ஜாகொட, ரெட்லி சில்வா ஆகியோரினது முயற்சியால் செயற்படுத்தப்படவுள்ளது. இச்செயற்திட்டத்திற்கு, சீரியநாடக அரங்கில் ஈடுபாடுடையவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். இவர்கள், இரண்டு வருடங்கள் இச்செயற்திட்டத்தில் இணைந்து செயற்படவேண்டும்; இவர்களிடமிருந்து பணமேதும் அறவிடப்படமாட்டாது.

மேற்படி செயற்திட்டத்தில் பங்குபற்ற விரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட கடிதஉறையுடன், கீழ்க்காணும் முகவரியுடன் தபால் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

மானெல் ஜாகொட<br>
இலக் 20, இரண்டாவது ஒழுங்கை,<br>
தெஹிவளை.

# சிறிமாவின் மூதாதை தமிழில் கையொப்பமிட்டார்!

1505ஆம்ஆண்டின் பின்னர் இலங்கை அந்நியரின் ஆட்சியின் கீழ் சென்றது. இலங்கையை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர்கள் தனித் தனியாக 1948 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர்.

1505 ஆம் ஆண்டு தொடக்கம் 1815 ஆம் ஆண்டு வரை இலங்கையின் கரையோரப் பகுதிகளையே மேலைத்தேயத்தவர்கள் கைப்பற்றி ஆட்சி செய்தனர். 1815ஆம் ஆண்டு வரைக்கும் கண்டி இராச்சியத்தை அந்நியர்களால் கைப்பற்ற முடியாது போயிற்று.

கண்டி இராச்சியம்1815ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியின் காலத்திலேயே கைப்பற்பட்டபொழுது கண்டி இராச்சிய அரசுனும் பிரதானிகளும் ஆங்கிலேயர்களும் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தில்கண்டிப் பிரதானிகள் தமிழிலும் ஒப்பமிட்டிருந்தனர். அவ்வாறு தமிழில் ஒப்பமிட்டவர்களில் ஒருவர்தான் ''ரத்வத்த திசாவ'' என்பவராவர்.

இவர் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவியும், முன்னைய நாள் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மூதாதையராவர். சிறிமாவின் மூதாதையரே தமிழில் ஒப்பமிட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

1956ஆம் ஆண்டு திருமதி சிறிமாவின் கணவர் பண்டாரநாயக்காதான் இலங்கையின் பிரதமராக இருந்தார்.

இந்த பண்டாரநாயக்காதான் இலங்கையின் அரசகரும மொழி சிங்களம் மட்டுமே என்ற சட்ட மூலத்தைக் கொண்டுவந்தவராவர். இதன் பின்புதான், தமிழ் மொழி ஒதுக்கப்பட்டது. இரண்டாந்தர மொழியாக்கப்பட்டது. இதிலிருந்துதான் பிரச்சினைகளும் எமது இலங்கையில் பல கோணங்களிலும் தலைதூக்கின.

□ புரட்சி மகன் □

## கலைச்சாரல்

# புதுமைப்பித்தன் மாப்பஸானின் கதைகளைத் திருடினாரா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

'கொலைகாரன் கை' என்ற கதையிலும்இதேவிதமாகச் சில சிறு மாற்றங்களைச் செய்திருக்கிறார் புதுமைப்பித்தன். ஆனால் சம்பவங்கள் தொடராக வரும்போது ஓரிடத்தில் தடங்கல்ஏற்படுகிறது. பிரெஞ்சுக் கதையில் வரும் கொலையுண்ட பாத்திரம் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவராகையால் அவர் உடலைப் புதைப்பதற்கு ஈமக்காட்டில்புதைகுழிதோண்டும் போது அதிலிருந்து ஒரு கை புறப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் புதுமைப்பித்தன் கதையில் அந்தப் பாத்திரம் பரமேஸ்வரன்என்ற பெயரைக் கொண்ட இந்து சமயத்தவர். சம்பிரதாயப்படி மயானத்தில் அவர் உடல்தகனம் செய்யப்பட வேண்டுமாகையால், புதைகுழி தோண்ட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாதல்லவா? அதனால் புதுமைப்பித்தன் சமயோசிதமாகநிகழ்ச்சியை மாற்றிவிடுகிறார். வேறோரிடத்தில் சில தொழிலாளர் ஏதோ காரணத்துக்காக மண்ணைத் தோண்டிக் கொண்டிருக்கும்போது அதிலிருந்து ஒரு கை புறப்பட்டதாக எழுதியிருப்பது, கதையின் போக்குக்குப் பொருத்தமில்லாது போய் விடுகிறது என்று கிருஷ்ணமூர்த்தி எடுத்துக் காண்பிக்கிறார்.

'நொண்டி' என்ற கதையிலும் இரண்டொரு சிறு மாற்றங்கள் தான் காணப்படுகின்றன. நொண்டியாக வந்து ரயிலேறியவர் ஒரு போர்வீரர் என்றும், பிரெஞ்சு யுத்தத்தில் காயமடைந்தவர்என்றும் மாப்பஸான் கதையில் காணப்படுகிறது புதுமைப்பித்தன் இந்தப் பாத்திரத்தைஇந்தியவிடுதலை இயக்கத்தில் பொலீசார் தடியடிப் பிரயோகத்தில் காயமடைந்து நொண்டியானவர் என்று காண்பிக்கிறார். ரயிலில் ஏறியவுடன் அவர்கொண்டு வந்த பரிசுப் பொருள்களில் ஒன்று இறைச்சிகலந்தரொட்டி (Pate) என்றுபிரெஞ்சில் இருப்பதைப் புதுமைப்பித்தன், அது நமதுபழக்கத்தில்இல்லாததால் ''புது உடுப்புத் துணிகள்'' என்று மாற்றியிருக்கிறார். பிரெஞ்சு கதாநாயகர் அணிந்திருந்தது தொப்பி, அதைமிகச் சாமர்த்தியமாக கதர்குல்லாயாகவும், கால் சட்டையைப் பஞ்சகச்சமாகவும், சுருட்டை பீடியாகவும் மாற்றிக் கொண்டார். இவற்றைத் தவிர, இந்தக்கதையில் வார்த்தைக்கு வார்த்தை மாப்பஸான் கதையை அப்படியே பெயர்த்து எழுதியிருக்கிறார் என்று கிருஷ்ணமூர்த்தி காண்பித்திருக்கிறார்.

டாக்டர் கிருஷ்ணமூர்த்தி தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவர் என்பது அவரது ஒப்பாய்வின் மூலம்தெரிய வருகிறது. இவரது ஆராய்ச்சியைநெறிப்படுத்திய பிரெஞ்சு மொழிப் பேராசிரியர் டாக்டர் மதனகோபால'னும் தமிழில் ஆர்வமுள்ளவர். இவர் 1984 இல் டில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், 'மொழி பெயர்ப்பு இலக்கியம்' என்ற தலைப்பில் நிகழ்ந்த ஒரு கருத்தரங்கில், 'புதுமைப்பித்தன் தழுவிஎழுதிய மாப்பஸானின் கதை' என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக்கட்டுரை படித்தார். இந்த ஆய்வில் பேராசிரியர் மதனகோபாலன் புதுமைப்பித்தன் பெயரில் வெளிவந்த 'நொண்டி' என்ற கதையை உதாரணமாக எடுத்துக் கொண்டு, அதை அப்படியே கருத்துப் பிசகாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், L'Infirmeஎன்றமாப்பஸானின் பிரெஞ்சுக்கதையை ஆங்கிலத்தில் வடிவமாக்கி, இரண்டு ஆங்கிலவடிவங்களையும் பக்கம் பக்கமாக வைத்தும் அவற்றின் ஒப்புமையைக் காண்பித்தார். இந்தக் கதையைத் தவிர, மற்றும் புதுமைப்பித்தனின் நான்கு கதைகள் — 'பயம்' (La Peur the Fear) 'அந்த முட்டாள் வேணு' (Ce Cochon de Morin – That Pig Morin) கொலைகாரன் கை' (La Main d' Ecorche – The Hand of the Flayed Criminal, 'சமாதி' (La Tombe - the Tomb) ஆகியவையும் மாப்பஸான் கதைகளின் தழுவல்கள் என்று டாக்டர் மதனகோபாலன் தமது ஆய்வில் தெரிவித்தார். இந்த ஐந்து கதைகளும், 'புதியஒளி' என்ற தலைப்பில் புதுமைப்பித்தனின் இருப்பத்தாறு சிறுகதைகள் அடங்கிய தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்விமர்சகர்கள் 'தழுவல்' என்ற வார்த்தையை (Adaptation and Plagiarism) என்ற இருவகையான செயல்களுக்கும் பொதுவான சொல்லாக உபயோகித்து வருகிறார்கள். பிறமொழி ஆசிரியர் ஒருவரின் கதையை, அந்த ஆசிரியரின் 'பெயரைக்குறிப்பிட்டுத்' தழுவி எழுதுவதையும் (adaptation), பெயரைக் குறிப்பிடாமல், தம்முடைய சொந்தக் கதைபோல் தெரியக்கூடியதாகத் தழுவி எழுதுவதையும், (இலக்கியத் திருட்டு— Plagiarism) தழுவல் என்றுதான் உபயோகித்து வருகிறார்கள். புதுமைப்பித்தனின் மணிக்கொடி விவாதத்தில் மூல ஆசிரியருடையபெயரைக்குறிப்பிட்டுத் தழுவி எழுதுவதையும், குறிப்பிடாமல் தழுவி எழுதுவதையும் அவர் கண்டித்தார்.

பேராசிரியர் மதனகோபாலன் தம்முடைய ஆய்வில் புதுமைப் பித்தனுடைய தழுவலை Plagiarism என்ற பொருளில் கொள்ளாமல் adaptation என்ற பொருளில் எடுத்துக் கொண்டு அதற்கு ஒருசமாதானம் சொல்கிறார். மொழிபெயர்ப்புகளிலும் தழுவல்களிலும், மூலமொழியிலுள்ள அமைப்பை வருமொழியின் மரபுக்கும் இயல்புக்கும் ஏற்றவாறு சிற்சிலமாறுதல்களோடு புனரமைப்புச் செய்யவேண்டியது அவசியந்தான் என்று ஆந்த்ரே ஜீத் (Andre Gide) என்ற பிரெஞ்சு இலக்கிய மேதையின் கருத்தைச் சான்று காட்டிவிட்டு, இப்படியான தழுவலை மற்றொரு பிரெஞ்சுப் பேராசிரியர் ராபர்ட் எஸ்காப்பிட் (Robert Escarpit) என்பவரைச் சான்று காட்டி, புதுமைப்பித்தனின் தழுவலை ''படைப்புத் துரோகம்'' (Creative Treason) என்ற வகையில் சேர்க்கலாம் என்கிறார். பேராசிரியர் எஸ்காப்பிட், மொழிபெயர்ப்புகளிலும் தழுவல்களிலும் (translations and adaptations) மற்றும் பழைய சுவடிகளிலிருந்தும் படியெடுத்து அச்சில் கொண்டுவரும் போதும், அங்ஙனம் மொழிபெயர்ப்பவர்கள், தழுவல் செய்பவர்கள், படியெடுப்பவர்கள், புதிய வடிவத்துக்கு ஏற்றவாறு பலவித மாற்றங்கள் செய்வதால், மூல வடிவம் அதன் ஆசிரியர் கருதிய பொருளை இழந்து, புதிதாக மாற்றம் செய்தவரின் கருத்துக்கள் தலைதூக்கி நிற்கும் நிலை ஏற்படுகிறது என்கிறார். உதாரணமாக, டானியல் டீஃபோவின் ராபின்சன் குரூசோ (Daniel Defoe's Robinson Crusoe), ஜோனாதன் சுவிஃப்டின் கலிவரின் பிரயாணங்கள் (Jonathan Swift's Gullivers Travels) ஆகிய இரண்டு நூல்களும், பிரதி செய்தவர்கள் பதிப்பித்தவர்களின் சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக, மூல ஆசிரியர்கள் எதிர்பார்த்த உயர் இலக்கியத் தரத்திலிருந்து மாறுபட்டு, இப்போது குழந்தை இலக்கிய வடிவங்களாகிவிட்டன என்கிறார் எஸ்காப்பிட். இவ்வகையான மாற்றத்தில், மூல ஆசிரியருக்கு இழைக்கப்படும் ''துரோகம்'' ஒருபக்கம் இருக்க, புதிதாக மொழிபெயர்ப்பதில் அல்லது தழுவுவதில் ''படைப்பு''என்ற அம்சமும் சேர்ந்துவிடுவதால் அதனைப் படைப்புத் துரோகம் என்று சொல்லலாம் என்று பேராசிரியர் எஸ்காப்பிட் ஒரு புதிய விளக்கத்தைத் தருகிறார். இந்த விளக்கத்தையே ஆதாரமாகக் கொண்டு டாக்டர் மதனகோபாலன் புதுமைப்பித்தனின் தழுவலுக்குக் கைகொடுத்தார். எஸ்காப்பிட்டின் விளக்கத்தில் நமக்குத் தெரியவருவது, மொழிபெயர்ப்பிலோ தழுவலிலோ வடிவமும் பொருளும் மாறுபட்டாலும், மூல ஆசிரியர் தன் உரிமையை இழப்பதில்லை. ஆனால், புதுமைப்பித்தனின் தழுவல் கதைகள் மாப்பஸான் பெயரில் வெளியிடப்படவில்லை. புதுமைப்பித்தன் கதைகள், என்று அவர் சொந்தமாகப் படைத்த கதைகள் போல் தோற்றமளிப்பதால், அவை ''இலக்கியத் திருட்டு'' (Plagiarism) என்ற அவப்பெயரைப் பெறுகின்றன.

பேராசிரியர் எஸ்காப்பிட் மற்றொரு புதுமையான நாமகரணத்தையும் சில இலக்கிய வாதிகளுக்குச் சூட்டியிருக்கிறார். மொழிபெயர்ப்பவர், தழுவி எழுதுபவர், அல்லது படிஎடுப்பவர் தங்கள்பணியில் மூல ஆசிரியரின் போர்வையில், தமது சொந்தச் சரக்குகளைப் புகுத்தி, அவை வெளிவரும் போது மகிழ்ச்சி பெறும்போது அவர்களை ''குயில் எழுத்தாளர்கள்'' (Cuckoo writers) என்கிறார். காக்கையின் கூட்டில் குயில் தனது முட்டைகளை இட்டு, அவை குஞ்சாகப் புறப்படும் போது மகிழ்ச்சியடைவது போன்றது இது.



புதுமைப்பித்தன

பேராசிரியர் மதனகோபாலன் புதுமைப்பித்தனின் புகழ் பங்கப்படாமல் இருப்பதற்காக, அவர் தழுவல்களைப் ''படைப்புத்துரோகம்'' என்ற எஸ்காப்பிட்டின் இலக்கணத்தில் பாதுகாப்புத் தேடினாலும், அந்தக் கதைகளின் மூல ஆசிரியரின் பெயரை இருட்டடிப்புச் செய்ததால், ''இலக்கியத் திருட்டு'' என்ற களங்கம் ஏற்படுகிறது. புதிய ஒளி' தொகுப்பில் சேர்க்கப்பட்ட இந்த ஐந்து கதைகளும் எப்பொழுது எழுதப்பட்டன என்பதை அறியவேண்டும். புதுமைப்பித்தன் வாழ்நாளில் இவை எந்த ஒரு பத்திரிகையிலோ, நூல் வடிவிலோ வெளிவந்ததாக இதுவரை நமக்குத் தெரியவில்லை. அவர் காலமாகி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் (1953) 'புதிய ஒளி' என்ற தொகுப்பு முதல்பதிப்பாக வெளிவந்தது. இத்தொகுப்பு நூலை வெளியிட்ட பதிப்பகத்தாரின் கையிலே எழுத்துப் பிரதியாக இருந்து, புதுமைப்பித்தன் மறைந்த பின்னர் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் நாட்டமுள்ளவர்களுக்கு, நமது நாட்டுப் பதிப்பகங்களின் செயல் முறையும், ஆசிரியர்களின் அக்கறையின்மையும், சட்ட விதிகளின் தாட்சண்யமும் எல்லாம் சேர்ந்து, நேர்மையான இலக்கிய வரலாற்றுக்கு வேண்டிய தரவுகளைச் சேகரிக்க முடியாமல் போகிறது. புதுமைப்பித்தனின் தழுவலைப் பற்றித் தெரிவித்த டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சொல்கிறார்.

இந்த ஐந்து கதைகளும் எப்படி புதுமைப்பித்தன் சொந்தப்படைப்புகள் என்ற வகையில் 'புதிய ஒளி' தொகுப்பில் சேர்க்கப்பட்டன என்பதுதெரியவில்லை. இவை அத்தனையும், சிற்சில மாற்றங்களைத் தவிர, மாப்பஸான் கதைகளின் நேர் மொழிபெயர்ப்பாகக் காணப்படுகின்றன. சிறந்த படைப்பாளியாகிய அவர் இலக்கியத் திருட்டு (plagiarise) செய்யத் துணிந்திருப்பார் என்று நம்பமுடியவில்லை. நேர்மையோடு அவர் இவற்றைத் தழுவல் கதைகள் என்று குறிப்பிட்டிருக்க எண்ணியிருக்கலாம். ஆனால், இவற்றைப் பதிப்பித்தவர்களின் அஜாக்கிரதையால் அப்படியான குறிப்பு விடுபட்டிருக்கலாமோ என்னவோ இருந்தபோதிலும், நம்மையெல்லாம் குழப்பத்திலாழ்த்தும் ஒரு கேள்வி என்னவென்றால், போயும் போயும் தமிழில் எழுதுவதற்கு பிரெஞ்சு இலக்கிய மாணவர்களுக்கே அதிகம் பரிச்சயமில்லாத இந்தக் கதைகளைத்தான் புதுமைப்பித்தன் தேர்ந்தெடுத்திருக்க வேண்டுமா என்பதுதான்''

(அழுத்தம் ஆசிரியர்களது) □

# இலங்கையில் பேச்சுவார்த்தைகளின் நடைமுறை: 1983 - 86

(4-4-1990 இன் தொடர்ச்சி)

83. சர்வகட்சி மாநாட்டு குழுக்களுக்கு கிறிஸ்தவ அமைப்புக்களின், பிரதிநிதிகளினால், சகல சமுதாயத்தினரது துன்பங்கள் அவற்றின் தீர்வுக்கான சிபார்சுகள் அடங்கிய செயற்திட்ட அறிக்கை ஒன்று சர்வகட்சி மாநாட்டிற்கு அளிக்கப்பட்டது. கொழும்பு; ஆச்பிஷப் ஹவுஸ். 840221-32-ப

இத்திட்டத்தில், சிங்களவர் தமிழர், முஸ்லிம், மலாயர், சிங்களக் குடியான்கள், பெருந்தோட்ட இந்தியத் தொழிலாளர்கள், குடிசை வாழ் சேரி மக்கள் போன்றோரது வேலை அபிலாஷைகள் தொடர்பாக சலனம் காட்டப்பட்டுள்ளது. இவற்றில் பின்வரும் பிரிவுகள் அடங்கியுள்ளன. புலிகள் அரசியல் பரிமாணங்கள், அரசாங்க ஒழுங்கு விதிகள், கல்வி வேலை வாய்ப்பிற்கான நியாயமான சந்தர்ப்பம், காலனி குடியேற்ற முறைகள், பொருளாதார, கலாசார அபிவிருத்தி என்பன, மாகாணசபைகளுக்கு ஆசிரியர் ஆதரவினைக் காட்டுகின்றார். சட்டம், ஒழுங்கு, நிலக் குடியேற்றம் போன்றவை தொடர்பாக பொறுப்பினைப்பங்கிடுதலின் அவசியத்தினை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

84. விஸ்வ இந்து பரிஷித் - விஸ்வ இந்து பரிஷித்தினது செயற்திட்ட அறிக்கை - (இந்து அமைப்புக்கள்) கொழும்பு - விஸ்வ இந்து பரிஷித், 84 02 22. - 8. ப.

பிரதேச சபைகள் உருவாக்குவதற்கான திட்ட ஒழுங்கொன்றினை இத்திட்டம் கொண்டுள்ளது. பிரதேச சபைகள் பின்வருவன தொடர்பாக சட்டவாக்கம் செய்வதற்கும், அதிகாரத்தைச் செயற்படுத்துவதற்கும், கடப்பாடுகளை செயற்படுத்துவதற்கும், அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அவையாவன பிரதேசத்தின் சட்டம் ஒழுங்குகளைப் பேணுதல், சமூக பொருளாதார அபிவிருத்தி, கலாசார அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், நிலக்கொள்கை, நீதி நிர்வாகம், வரி அறவிடல் போன்றனவாகும்.

85. போடென்ஸ், கொசாங், ஜே. எவ். 1984 பெப். 27 திங்கள் அன்று நெதர்லாந்து இராட்சியத்தின் பதில் பிரதிநிதியாகிய தூதுவர் ஜே. எவ். போடென்ஸ் கொசாங் அவர்களது அறிக்கை: ஜெனீவா. ஐக்கிய நாடுகள் (ஜெனிவா)விற்கு நெதர்லாந்து இராட்சியத்தின் நிரந்தர தூதுக்குழு. ஜெனிவா 840227- 3.ப

இலங்கையின் நிலைமை தொடர்பாக பாரபட்சத்தினை தடுத்தும், சிறுபான்மையினரை பாதுகாப்பதுமான உபதூதுக்குழுவின் அறிக்கையின் நிகழ்ச்சி நிரலில் 19 வது அம்சம் கூறுவதாவது, கடந்த வருடம் இடம் பெற்ற இனக் கலவரம் தொடர்பாக இலங்கை அரசு தகவல்களை அளிக்க முன்வந்துள்ளமையினை டச்சு தூதுக்குழு வரவேற்றுள்ளது. இவ்வாறான பேச்சு வார்த்தைகளை உள்ளும், வெளியிலும் தொடர்ந்து நடுத்துவதற்கு அரசிற்கு ஊக்கம் அளித்துள்ளது. சர்வகட்சி மாநாடு இதற்கு ஓர் சிறந்த வாய்ப்பு என அறிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.

86 சர்வதேச சுதந்திர தொழிற் சங்கங்களின் மா சம்மேளனம், மனித உரிமைகள் தொடர்பான ஐ. நா. சபையினது 40 வது தொடர். நிகழ்ச்சி நிரல் விடயம். 19 பாரபட்ச தடுப்பும், சிறுபான்மையினர் பாதுகாப்பும் தொடர்பான உப ஆலோசனைக் குழுவினது அறிக்கை. ஜெனீவா, சர்வதேச சுதந்திர தொழிற் சங்கங்களின் மா சம்மேளனம். 840228 - 3. ப.

ச. சு. தொ. ச. மா சம்மேளனம் பிரதிநிதியின் குறிப்பு தெரிவித்த பிரச்சினைகளில் ஒன்று இலங்கை நிலைமை பற்றி உப ஆணைக்குழு எடுத்த தீர்மானம் பற்றியதாகும். சர்வகட்சி மாநாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் அரசியல் தீர்வு காணுவதாயின் காலமும், பொறுமையும் அவசியமாகும். அத்துடன் மனித உரிமைகள் நிலைமையில் முன்னேற்றம் காணக்கூடிய நேரடி நடவடிக்கைகளில் எதுவித தடையும் ஏற்படக் கூடாது. மற்றும் 1983 ஆம் ஆண்டு கலவரத்தில் ஈடுபட்டோருக்கு எதிரான பாரபட்சமற்ற சுதந்திர விசாரணை நடத்தப்படல் வேண்டும். அத்துடன் சகல பெருந்தோட்ட தமிழ் தொழிலாளர்கட்கு பிரஜா உரிமை வழங்கப்படல் வேண்டும்.

87. ஜயவர்த்தன. ஜே. ஆர். ஊக்கம், ஞானம், பொறுமை நிலவுவதாக 23 பெப். 1984 இல் மாண்புமிகு ஜனாதிபதி ஜயவர்த்தனா பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் பகுதி. இலங்கை செய்தி ரிவியூ கொழும்பு தகவற் திணைக்களம். இராஜாங்க அமைச்சு 8:0229 1 (15). 2. ப, 1 — 2

இலங்கை நிலைமைபற்றி ஜனாதிபதி பொதுவாக குறிப்பிட்டார். 1977 தேர்தல் விஞ்ஞானத்தில் ஐ. தே. கட்சி முன்வைத்த பல வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது. ஆனால் உலக பொருளாதார நிலையும் இலங்கையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அத்துடன் இலங்கையில் இனக் குழப்பங்கள் பற்றியும். 1983 ஜூலை கலவரம் பற்றியும் குறிப்பிடுகின்றார். சர்வகட்சி மாநாடு வழங்கியுள்ள நல்ல சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு, இம் மாநாடு வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையினையும் தெரிவிக்கின்றார்.

88. மக்டே மொற் நியால்: இலங்கையில் தலையீடு: ஜெனீவா சர்வதேச யூரர் ஆணைக்குழு. 840300. 3. ப.

நிகழ்ச்சி நிரல் விடயம். 12 ன் கீழ் மனித உரிமைகட்கான ஆணைக்குழு 40 வது கூட்டத்தொடரின், தலையீடு. இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள விஞ்ஞானம் தொடர்பாக சர்வதேச யூரர் ஆணைக்குழு பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாத தடுப்புச் சட்டம் விமர்சிக்கப்பட்டுள்ளது. இதன் பகுதிகள் ஏனைய ஜனநாயக நாடுகளிலுள்ளது போல அமையவில்லை. தற்போது இடம் பெறும் கட்சி கட்கிடையிலான பேச்சு வார்த்தைகள் ஓர் எதிர்பார்க்கப்பட்ட தீர்வினை ஐக்கிய இலங்கையில் உருவாக்கும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. 6வது திருத்தமும், அவசர காலவிதிகளும் கூட விமர்சிக்கப்பட்டுள்ளன. ஆணைக்குழு இந் நிலமையினை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என சிபார்சு செய்யப்பட்டுள்ளது. ச. யூ. ஆணைக்குழு சர்வகட்சி மாநாடு இடம் பெறும்போது. வேறு எந்தச் செயல்களும் இடம்பெறக் கூடாது என கேட்டுள்ளது.

89. பந்த் கே. சி. மனித உரிமைகள் தொடர்பான 40 வது கூட்டத் தொடரிற்கு வருகை தந்த இந்திய தூதுக் குழுவின் தலைவரது குறிப்பு- சிறீ கே. சி. பந்த் நிகழ்ச்சி நிரல் விடயம் 12 ஜெனீவா. ஐக்கிய நாடுகள் ஜெனீவா அலுவலகத்தின் இந்திய நிரந்தர தூது; 840305 - 4.ப.

இலங்கை நிலைமை தொடர்பாக நிகழ்ச்சி நிரல் 12 ன் கீழ் விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பு. இதன்படி ஏற்கனவே 24,000 இலங்கைத் தமிழர்கள் இந்தியாவில் , அகதிகளாக உள்ளனர். ஓர் நாட்டின் ஐக்கியம் ஒற்றுமையினைப் பாதுகாக்க வேண்டின் நாட்டின் எந்த ஒரு பகுதியினரும் பாதுகாப்பற்றவர் என்ற உணர்வு கொண்டிருத்தல் கூடாது. இதற்கு நீண்டகால அணுகுமுறை தேவை. இந்தியா ஓர் அரசியல் தீர்வு காணுவதற்கு தனது நல்லெண்ண உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளது.

90. மனித உரிமைகள் தொடர்பாக ஐ. நாடுகள் சபைக்கு சைப்பிரஸ் தூதுக்குழு; மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நா. சபைக்கு யூகோஸ்லவாக்கியா தூதுக்குழு சைபிரசும் யூகோஸ்லாவியாவும் வரை முடிவுகள் ஜெனீவா. ஐ. நா. மனித உரிமைக்கான ஆணைக்குழு 84 0307. 1. ப.

யூகோஸ்லாவியா, சைபிரசினால்; நிகழ்ச்சி நிரல் 12 ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு தீர்மானம். ஆணைக்குழு இலங்கை அரசு தன்னிச்சையாக சமர்ப்பித்த தகவல்களை கவனத்திற் கொண்டுள்ளது. அதாவது இலங்கை மக்களின் இணக்கத்தினையும் சமாதானத்தினையும் பேணி, பலப்படுத்துவதற்கு சகல கட்சிகளும் தொடர்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் புனர்வாழ்வு, மறுசீரமைப்பு தொடர்பாக எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளையும் வரவேற்பதுடன், சர்வகட்சி மாநாடு உட்பட, வரவேற்பதுடன்,இறுதியான தீர்வினைக் காணுவதில் வெற்றி பெறுவார்கள் என்றும், இவ்விடயத்தில் மேற்கொண்டு கவனிப்போம் என்ற நிலை ஏற்படாது என்றும் தெரிவிக்கின்றது.

91. சர்வகட்சி மாநாட்டு செயலகம், சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டம் அறிக்கைகைகள் தொடர்பாக பாராளுமன்றத்தின் ஆய்வு (8. 3. 84 வரை). கொழும்பு சர்வகட்சி மாநாடு செயலகம் 84 0310. 7. ப.

இவ் வறிக்கை, சர்வகட்சி மாநாட்டு செயலகத்திற்கு மகாசங்க பிரதம சபை, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், கிறிஸ்தவ பிரதிநிதிகள், அகில இலங்கை முஸ்லிம் லீக், விஸ்வ இந்துபரிசத் லங்கா சமசமாசக் கட்சி ஆகியவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு பத்திரங்களது மதிப்பீடும் ஒற்றுமைப் பாட்டின் ஆய்வுமாகும்.

92. அகில இலங்கை முஸ்லிம் சங்கம்; நாட்டின் இன்றைய இனங்களிடையான நிலையும், வட்ட மேசை மாநாடும். கொழும்பு, அகில இலங்கை முஸ்லிம் சங்கம் 84 0314. ப. 4.

இவ்வறிக்கை, தமிழ் சிங்கள சமூகங்களின் ஒற்றுமையின் தேவைப்பாட்டினையும், அ. இ. மு. சங்கத்தின் நிலைப்பாட்டினையும் காட்டுகின்றது. வரலாற்று ரீதியாக முஸ்லிம் களுக்கெதிரான பாரபட்சம் தொடர்பான ஓர் விளக்கத்தைத் தொடர்ந்து, சமர்ப்பிக்கப்பட்ட சமஷ்டி மாதிரி அமைப்பு முறையினை இணைப்பு ''சீ'' யில் கூறப்பட்டவாறு இது ஒத்துக் கொண்டுள்ளது. ஆயினும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஒருமைப்பாடு இவ்விரு மாகாண மக்களின் தீர்மானத்திற்கு விடப்பட வேண்டும். முஸ்லிம் பெரும்பான்மை மாகாணம் ஒன்று சரிவராத கட்டத்தில். இவ்விரு மாகாணங்களின் ஒன்றிணைப்பினையும் முஸ்லீம்கள் ஒத்துக் கொள்ளல்வேண்டும். முஸ்லீம்களின் எதிர்காலம் இவ்விரு மாகாணத்திலுமுள்ள தமிழ் முஸ்லிம்களது ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது.

93. 20. மார்ச் 1984 இல் மகா சங்க பிரதம சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை: 84 0320. - ப- 3.

கையெழுத்திடப்படாத இவ்வறிக்கை மகா சங்கத்தினரின் செயற்திட்ட அறிக்கையினை விமர்சிப்பதுடன், பிரதேச சபைகட்கான திட்டத்தினையும் இணைப்பு ''சீ'' யினையும் ஆதரிப்பதுபோல வாதிடுகின்றது.

94. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி: ஜனாதிபதி ஜயவர்த்தனாவிற்கு கடிதம் - சர்வகட்சி மாநாடு 84 0323 — 2. ப.

இக் கடிதத்தில், த.ஐ.வி.மு சர்வகட்சி மாநாடு தோல்வியில் முடிந்ததிற்கு அரசாங்கத்தினை குற்றஞ் சாட்டுகிறது. ஏனெனில் இணைப்பு ''சீ' யினை பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக கொள்ளாது அது தள்ளிவிட்டமையே காரணமாகும் வடக்கில் மேலும் கலவரங்கள் இடம்பெற இடமளிக்கக் கூடாது என அது அரசாங்கத்திற்கு கட்டளையிடுகின்றது.

95. வீரமந்திரி. சீ. ஜீ. இலங்கைக்கான மனிதஉரிமைகளின் புதிய வகைமுறை ஒழுங்கு - இனக் கலவரத்திற்கான ஓர் வழிமுறை - கொழும்பு - இன ஒற்றுமைக்கான சங்கம், 84 0400- 10.ப

இலங்கை வெளிநாட்டு வெளியீடுகளிலும் பிரசுரிக்கப்பட்டது. 1985 வசந்தகால சஞ்சிகை. (ஸ்காபாரோ - ஒன்ராரியோ, கனடா) இலங்கை சங்கங்களின் உலக சம்மேளனம் — 1985 - 39 - 45 ப. 1984 இல் கமர் சுகாதார விஞ்ஞான கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பேச்சு:

கொலம்பியா பல்கலைக் கழகம், நியூயோக். 1984 ஏப். 21. குடித்தொகையில் வேறுபாடான பகுதியினரிடையே ஒரு முறை இருந்து வந்த இணக்கத் தன்மையானது. பேண படுவது. எல்லாவற்றிற்குமேலான தேவையாகும் என பேச்சாளர் குறிப்பிடுகிறார். மேலும் பிரிவினைக் கோரிக்கைக்கான சட்ட ஏற்புடைமை குறித்து விஸ்தரிப்பதுடன் சர்வதேச சட்டத்தில் பிரிவினைக்கு எந்த அடிப்படையும் இல்லை என முடிக்கின்றார். இலங்கையிலிருந்து வெளியேறியவர்கள் தமது தாய் நாட்டைப் பற்றி சரியான தகவல்களைக் கொடுப்பதில் முக்கிய பங்கினை வகிக்க வேண்டும். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மட்டத்தில் பிரச்சார திட்டம் ஒன்று உண்டு. இப் பிரச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து இலங்கைக்கான நீதியினை பெற்றுக் கொள்ளுதல் அவசியமாகும். வீரமந்திரி, எப்படி அரசு இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான நிலையினை, சட்டங்களைப் பலப்படுத்தல், மற்றும் விசாரணை மன்றங்களை உருவாக்குவதன் மூலம் முன்னேற்றலாம் என்பது பற்றி பல சிபார்சுகளைக் கூறியுள்ளார். இவர் ''ஓம்புட்ஸ்மன்'' அலுவலகம் மற்றும் பாரபட்சத்திற்கெதிரான சட்டமூலம் பற்றியும் குறிப்பிடுகிறார். மேலும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் அமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் பற்றியும் ஆலோசனைகளை முன்வைக்கிறார்.

(தொடரும்)

## தமிழர்களுக்கு எதிரான

# மனித உரிமை மீறல்களின் குறிப்பேடு

| இடம் | தன்மை | சம்பவ விபரம் |
|---|---|---|
| **16-1-1985** | | |
| மட்டக்களப்பு | கைது | மட்டக்களப்பு, கோட்டைக்கல்லாறு, அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில் ஆகிய இடங்களில் மாணவர் உட்பட 15 தமிழர்கள் பொலீசாரினாலும், பொலீஸ் அதிரடிப் படையினராலும் கைது செய்யப்பட்டனர். |
| யாழ்ப்பாணம் | ஏனைய | தமிழ்த் தீவிரவாதிகள் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தைத் தாக்கினர். உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. |
| யாழ்ப்பாணம் | சேதம் | பளைக்கும், கொடிகாமத்திற்கும் இடையில் புகை வண்டிப் பாதை ஒரு குண்டினால் சேதப்படுத்தப்பட்டது. |
| யாழ்ப்பாணம் | தேடுதல் | பாதுகாப்புப் படையினர் கொக்குவிலில் தேடுதலை மேற்கொண்டனர். |
| யாழ்ப்பாணம் | ஏனைய | நாவற்குழியில் ராணுவத்தினர் ஒரு தொழிற்சாலையை முகாம் அமைப்பதற்காக எடுத்துக் கொண்டனர். அதன் காரணமாக 100 பேர் தமது வேலையை இழந்தனர். |
| யாழ்ப்பாணம் | இறப்பு, காயம் கைது | மைலிட்டியிலிருந்து தமிழ் நாட்டிற்கு 23 அகதிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த ஒரு படகை நோக்கிக் கடற்படையினர் சுட்டனர். விஜயலட்சுமி பெருமாள் (வயது 18) கொல்லப்பட்டார். பத்து மாதக் குழந்தை உட்பட ஐந்து பேர் காயமடைந்தனர். ஏனையோர் ராணுவத்திடம் கையளிக்கப்பட்டனர். |
| முல்லைத்தீவு | இறப்பு சேதம் | முல்லைத்தீவில் ராணுவம் ஒரு வீட்டிற்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு மாணவர், இரு பெண்கள் அவர்களுள் ஒருவர் கர்ப்பிணி உட்பட 14 பொது மக்களைக் கொன்றனர். அவர்களின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. ராணுவத்தினர் எரித்தனர். ராணுவத்தினர் வீட்டை எரித்தனர். |
| திருகோணமலை | கைது | ராணுவத்தினர் சாம்பல்தீவில் 12 இளைஞர்களைக் கைது செய்தனர். |
| **17-1-1985** | | |
| மட்டக்களப்பு | | புனானை புகையிரத நிலையத்தில் ஒரு ராணுவ முகாம் நிறுவப்பட்டது. |
| மட்டக்களப்பு | கைது, தேடுதல் | பொலீசாரும், பொலீஸ் அதிரடிப்படையினரும் மண்டூரில் தேடுதலை மேற்கொண்டு 98 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர். |
| மட்டக்களப்பு | கைது, தேடுதல் | பாதுகாப்புப் படையினர் களுவாஞ்சிக் குடியில் தீவிர தேடுதலை மேற்கொண்டு 50 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர். |
| யாழ்ப்பாணம் | காயம் | ராணுவத்தினர் பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் ஓர் உழவு இயந்திரச் சாரதியையும், ஒரு விவசாயியையும் சுட்டுக் காயப்படுத்தினர். அவர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். |
| யாழ்ப்பாணம் | கைது | மயிலிட்டிப் பகுதியில் 22 மீனவர்கள் பாதுகாப்புப் படையினரால் கடலில் கைது செய்யப்பட்டனர். |
| யாழ்ப்பாணம் | சேதம் | தமிழ்த் தீவிரவாதிகளால் திருத்தப்பட்ட வன்னதி முல்லை பாலங்களுக்கு ராணுவம் மீண்டும் குண்டு போட்டது. |
| யாழ்ப்பாணம் | சேதம் கைது | மயிலிட்டி - வல்லை வீதியில் இனந்தெரியாதவர்களினால் ஒரு புல்டோசர் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து 100க்கு மேற்பட்டவர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர். |
| யாழ்ப்பாணம் | கைது, விடுதலை | பலாலியில் 14 தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு, பின்பு விடுதலை செய்யப்பட்டனர். |
| கிளிநொச்சி | தேடுதல் | திருநகரில் பாதுகாப்புப் படையினர் வீட்டுக்கு வீடு தீவிர தேடுதலை மேற்கொண்டனர். |
| மன்னார் | ஏனைய | 29 - 12 - 84 தொடக்கம் நிறுத்தப்பட்டிருந்த தலைமன்னாருக்கும் அனுராதபுரத்திற்கும் மிடையிலான புகைவண்டிச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. |
| **18-1-1985** | | |
| யாழ்ப்பாணம் | தேடுதல், கைது, காயம் | மைலிட்டியில் பாதுகாப்புப் படையினர் தேடுதலை மேற் கொண்டு 250 இளைஞர்களைக் கைது செய்தனர். தேடுதலின் போது அவர்கள் இரத்தினசிங்கம் ஆனந்தராஜா (வயது 20) என்பவரைச் சுட்டுக் காயப்படுத்தினர். அவர் பின்பு தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். |
| கிளிநொச்சி | தேடுதல் | பாதுகாப்புப் படையினர் கிளிநொச்சியிலுள்ள எல்லாக் கடைகளிலும் தேடுதலை மேற்கொண்டனர். |
| வவுனியா | இறப்பு | ராணுவத்தினர் செட்டி குளத்தில் ஜோன்பிள்ளை அருளப்பு (வயது 45) என்பவரைச் சுட்டுக் கொன்றனர். |
| **19-1-1985** | | |
| மட்டக்களப்பு | திருட்டு | மட்டக்களப்பு மக்கள் தமது தேங்காய்களையும் மீன்களையும் வாகரையிலுள்ள பாதுகாப்புப் படையினர் கொள்ளையடித்து வருவதாக அமைச்சர் கே. டபிள்யூ. தேவநாயகத்திடம் முறையிட்டனர். |

(தொடரும்)

## உனக்கொரு வார்த்தை

ஓ சோளகமே
நீ,
தொலைந்து போ!
பொழுதும் பேசிச்சிரித்த
பொற்கூபில மரங்களெல்லாம்
'சரார் சரார்'' எனச் சண்டையிட்டுச்
சாவை அணைக்கிறதே!

வெண்ணிலவு தெறித்துடையும்
மேலைக் கடல் வெளியில்
தோணி கொண்டு பாயிழுத்த
துயர் படர் வாழ்வெல்லாம்
சடலோடு கோபமுற்று
கரையோரம் நீளுகிறதே!

சிட்டுச் சிட்டாய்
சிறகடித்த
சிந்தனைக் குருவியெல்லாம்
சிறகு வலித்து
எங்கோ ஒளிந்தனவோ!

ஓ
ஊரை அள்ளிச் சுருட்டி
ஊதித்தள்ளும்
ஊழிக் காற்றே,
இயற்கையைக் கெடுத்த
இறுமாப்பு உனக்கு.

சுட்டெரிக்கும் — பெரு
மூச்சுவிட்டு,
உனக்கொரு வார்த்தை.
''சோளகமே
நீ
தொலைந்து போ!
மனம் நெருடி
இதம் தந்து
வாழ வழிவகுக்கும்
வாடைக காற்றை
வரவிடு.''

— பா. அன்பு □

## வளரும் விதை நெல்

வடலிப் பனங்காணி
வலுவிழந்த சிறுகுடிசை
வாடைக்காற்றில் — உயிர்
வருந்தும் இலாம்பருகில்
பயிலும் சிறுசுருத்தே
பாலகியே ஏனழுதாய்?

அள்ளி அணைத்தெடுக்கும்
அப்பாவைக் காணோம்
ஆரமுதம் ஊட்டுகிற
அம்மாவும் நோயாளுள்
முறைகூறித் தேறறுதற்கு
மூத்தவர் இங்கில்லை—

பசி சிறுகுடலைப்
பற்றி எரிக்கிறதோ?
புழுதி புகுந்து
விழியை எதிர்க்கிறதோ?
தனிமையிலே மனம்
சோர்ந்து தளர்கிறதோ?

அழாதே! அழுதெதுவும்
ஆகாது! இங்கு
கண்ணீரைத் துடைத்து எறி
கண் -- ஒளியைத் தேட்டும்

'முல்லைக்குத் தேர்கொடுத்த
மன்னன்' கதையினை
நம்பி ஏமாறாதே!
நீயே உனக்குதவி.

வெள்ளத்தையும் மீறி
வளரும் விதைநெல் நீ!
எழு! உன்கைதான
அம்மாவின் பசி ஆற்றும்!

— நா. சிவசிதம்பரம் □

## தூவானம்

### ○ 'அடூர்'இற்கு மீண்டும் விருது

இந்தியாவின் '37 ஆவது தேசிய திரைப்பட விருதுகள்' அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. புகழ்பெற்ற வங்காள இயக்குநரான புத்தடெப் தாஸ்குப்தாவின் பக் பஹதூர், சிறந்த திரைப்படத்திற்கான 'தங்கத் தாமரை' விருதினைப் பெற்றிருக்கிறது. சிறந்த இயக்குநருக்கான விருது மதிலுகள் என்ற மலையாளப் படத்தை இயக்கிய அடூர் கோபாலகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்டுள்ளது; இது அவரது ஆறாவது படம். அத்தோடு, சிறந்த இயக்குநருக்கான தேசிய விருதினை அவர் பெறுவது நான்காவதுமுறையாகும் என்பதும், குறிப்பிடத்தக்கது. 'அடூர்', 'பூனே' யிலுள்ள 'இந்தியத் திரைப்பட, தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்'தில் பயின்றவர்.

அவரின் முதலாவது படமான சுயம்வரம் (1972), வீட்டைவிட்டு ஓடிச்செல்லும் இரண்டு காதலரைச் சித்திரிக்கிறது. காதலின் வஸீகர மயக்கின் பின் எதிர்கொள்ள நேர்கிற கசப்பான புற வாழ்க்கை நிலைமைகள், படத்தின் மையம். இது கொழும்பிலும் கண்டியிலும் திரைப்பட விழாவொன்றில் முன்பு காட்டப்பட்டது.

வயதுக்கேற்ற அறிவு வளர்ச்சியில்லாத ஒருவனின் வாழ்க்கையைக் கொடியேற்றம் சித்திரிக்கிறது.

அடுத்து அவர் உருவாக்கிய எலிப்பத்தாயம். நிலப்பிரபுத்துவத்தின் எஞ்சிய அடையாளங்கள் சிலவற்றைச் சித்திரிக்கும் படம். இது 'பிரித்தானிய திரைப்படப் பயிற்சி நிலையத்'தின் விருதினையும் பெற்றது.

கொம்யூனிஸ்ற் கட்சியின் தீவிர அரசியல் ஊழியனாக இருந்து, பிந்திய நாட்களில் குடியிலும் விரக்தியிலும் சீரழிந்துபோகும் ஒருவனைப் பற்றியது முகாமுகம்.

அடுத்த படமான அனந்தராம் கூடா உறவும், அதனால் விளையும் குற்ற உணர்வும், தனிமையும் கொண்ட கதாநாயகனின் உள்மன உணர்வுகளை ஆராய்கிறது. படத்தின் மையக் கருத்தைப் பற்றிச் சொல்லுகையில் ஒரு முறை 'அடூர்' இவ்வாறு குறிப்பிட்டார்: ''விஷயங்களைக் குறித்த நம் அறிவு முழுமையானதல்ல; ஆனால், நாம் அப்படி நினைத்துக் கொள்கிறோம். மேலும், ஒவ்வொருவரது பார்வையும் கோணமும் மாறுபடுகிறது.''

நீலாம்பரன்

கடைசிப்படமான மதிலுகள், தனது தோழர்கள் விடுதலையாகிச் செல்ல சிறையில் தனிமையை உணரும் ஓர் அரசியற் கைதியைப் பற்றியது. நிஜமும் கற்பனையும் இணைந்து பின்னப்பட்ட இப்படம், புகழ்பெற்ற மலையாள எழுத்தாளரான வைக்கம் முகம்மது பஷீரின், சுயசரிதைப்பாங்கான குறுநாவலை அடிப்படையாகக் கொண்டது; இக்குறுநாவல் தமிழிலும் வெளிவந்திருக்கிறது.

அண்மையில் வெளிவந்த ஃப்றொன்ற் லைன் சஞ்சிகையில் 'அடூர்' சொல்கிறார்: ''இன்றும், என்னைக் கண்டு பிடிக்கும் செயற்பாட்டிலேயே உள்ளேன். என்னத்தைச் செய்கிறான் என்பதைப்பொறுத்தே ஒருவன் கலைஞனாகிறான். அவன் தனது படைப்பினூடாகத் தன்னையே வெளிப்படுத்துகிறான்; இது தொடர்ந்துசெல்லுமொரு செயற்பாடு.''

''அவனது படைப்பில், ஏதாவது நிலைத்த அக்கறைகளுண்டா?'' என்று கேட்கப்பட்டதற்கு, அவர் பின்வருமாறு சொன்னார்:

''அவ்வாறு ஏதாவது இருக்கிறதா என்று இப்போது சொல்வது, சிலவேளை காலத்துக்கு முந்தியதாகலாம். இதுவரை சிறு எண்ணிக்கையான ஆறு படங்களையே நான் உருவாக்கியுள்ளேன். ஆனால் ஏற்கெனவே சொல்லப்பட்டவொன்றை, எனது படங்களில் திரும்பவும் சொல்லக்கூடாதென்பதில் பிரக்ஞையுடன் உள்ளேன் என்பதைக், குறிப்பிட முடியும். திரும்பவும் ஒன்றையே சொல்லுவதென்பது பார்வையாளருக்கு மட்டுமல்லாது, எனக்குங்கூடச் சலிப்பையே ஊட்டும். எனது ஒவ்வொரு புதிய படத்தினையும் விமர்சிக்கவரும்போது, அநேக விமர்சகர்கள், எனது பழைய படங்களைப் பற்றிய எண்ணங்களையும் தம்முடன் சுமந்து வருவதானது, பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. ஒரேமாதிரித் திரும்பவும் செயற்படக்கூடாதென்பதற்காகவே, விரைவாக அடுத்த படத்தை உருவாக்குவதை எப்போதும் தவிர்த்து வருகிறேன். அல்லாவிடின், மற்றவர்களினால் இல்லையென்றால், உங்களின் செல்வாக்கிற்காவது இலகுவில் உட்பட்டுவிடுவீர்கள்.'' □

## 'அறவழி' எழுத்தாளர்பட்டறை

அறவழிப் போராட்டக்குழு என்ற சமூகநல' ஸ்தாபனம், இளம் சந்ததியினரின் ஆற்றல்களை விருத்தி செய்யும் நோக்குடன் ஏற்பாடு செய்த இளம் எழுத்தாளர் பட்டறை ஏப்ரில் மாதம் 20, 21, 22 ஆம் திகதிகளில், கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெற்றது. இதனைப் பொறுப்பேற்று நெறிப்படுத்தியவர் கலாநிதி சி.மௌனகுரு ஆவர். முன்னதாக நடைபெற்ற சில எழுத்தாளர் பட்டறைகளை நெறிப்படுத்தித் தன் திறமையை வெளிக்காட்டிய அவரின் தனித்துவ ஆளுமை, இப் பட்டறை நிகழ்ச்சியிலும் பளிச்சிட்டது.

ஏறத்தாழ முப்பது பயிற்சியாளர்கள்வரை பங்குபற்றிய இப்பட்டறையினை அறவழித் தலைவர் க. கோபாலகிருஷ்ணன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். நவீல்ட் பாடசாலை அதிபர் ஜே. எஸ். டேவிட் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறுகதைநாள், கவிதைநாள் என்ற இருபிரதான நிகழ்ச்சிகளிடையே சில சிறிய நிகழ்வுகளும் இடம் பெற்றன. இவற்றில் பிரதான அம்சமாக எழுத்தாளர் அறிமுகமும், கலந்துரையாடலும் இடம்பெற்றன. அ.யேசுராசா, ஐ.சாந்தன், க.ஸ்ரீகணேசன், எஸ்.ஜெயசங்கர், நாகக. சிவசிதம்பரம்

□ பகல் புறா □

ஆகிய எழுத்தாளர்கள் இதில் கலந்து கொண்டனர். பட்டறையில் கலந்து கொண்ட பயிற்சியாளர்கள் தனித் தனிக் குழுக்களாகப் பிரிந்து, ஒவ்வொரு எழுத்தாளருடனும் அரைமணி நேரம் தனித்தனியாகக் கலந்துரையாடினர்.

சிறுகதை நாளில், தமிழ்ச் சிறுகதையின் அமைப்புப்பற்றி கலாநிதி நா.சுப்பிரமணிய ஐயர் உரை நிகழ்த்தினார். சிறுகதை பற்றிய இவரது அபிப்பிராயமும் மதிப்பீடும் ஏனையவர்களது மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது, சற்று ஜனரஞ்சகத் தன்மை கலந்ததாகக் காணப்பட்டது

கவிஞர் இ.முருகையன் கவிதைநாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். கவிதையாக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள், கவிதையாக்கம் பற்றிய பல்வேறு அம்சங்களையும் தொட்டுக் காட்டினார், ஆயினும் அது போதுமானதாக இல்லையென, முருகையனே ஒப்புக் கொண்டார். தொடர்ந்து அறிய விரும்பும் கவிதை ஆர்வலருக்கு, தனிப்பட்ட முறையில் உதவ விரும்புவதாகவும் குறிப்பிட்டார். எஸ்.சிவலிங்கராஜா கவிதையும் மொழியும் பற்றி உரை நிகழ்த்தினார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

இக் கதை Das Urteil Und Andere Ereahlungen எனும் சிறுகதைத் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் நாவல் இலக்கியத்தை நவீனப்படுத்தியவர் காவ்ஃகா (Kafka). இவரின் வருலகையுடன், கதை எழுதுபவனே கதாபாத்திரமாக மாறி எழுதும் முறை (அதாவது கதை சொல்பவன் மறைந்து விடுகிறான்) தொடங்குகின்றது. காவ்ஃகா வின் எழுத்துக்கள் நம்பிக்கை வறட்சியில் இருந்து எழுந்தவை என்று கூறப்படுகின்ற போதும், அறுபதுகளில் ஆசிய இலக்கியங்களை அவர் நிறையவே பாதித்திருக்கின்றார்.

தமிழில் குறைவான சிறுகதைகளையே எழுதி அதிக புகழ் பெற்ற மௌனி (அழியாச் சுடர், மௌனி கதைகள்) காவ்ஃகாவை அடியொற்றி எழுதியவர் என்று சொல்லப்படுகின்றது

3 ஜூலை 1883இல் பிராக் (Prag) இல் பிறந்த காவ்ஃகா காச நோய் காரணமாக 1922 இல் தனது சட்டவல்லுனர் வேலையில் இருந்து ஒதுங்கி, 1924 இல் காலமானார். அவரது உயிலில், தனது ஆக்கங்கள் அனைத்தையும் எரித்து விடுமாறு எழுதியிருந்தும் பின் உரிமை பெற்ற அவரது நண்பன் மக்ஸ் ப்றொட் (Max Brod) இனால் அவை அழிக்கப்படாமல் உலகிற்கு வெளிக்கொணரப்பட்டன. காவ்ஃகா தனது இறப்பின் அதிக காலத்திற்குப் பின்னரே உலகத்தால் அறியப்பட்டார்.

தமிழில் காவ்ஃகாவின் ஒருசில கதைகள் சி.சு. செல்லப்பாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த எழுத்து சஞ்சிகையில் வெளிவந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. Die Verwandlung எனும் அவரது கதை பரவலாக அறியப்பட்ட கதை.

# சட்டத்தின் முன்னால்

காவ்ஃகா

சட்டத்தின் முன்னே ஒரு காவலாளி நின்று கொண்டிருக்கிறான். இந்தச் சட்டத்தின் உள்ளே செல்ல காவலாளியிடம் அனுமதி கேட்டு நிற்கிறான் ஒரு நாட்டுப் புறத்தவன். காவலாளியோ இப்போது உட்செல்ல அனுமதிக்க முடியாதென்கிறான். சிறிது யோசித்த நாட்டுப் புறத்தவன், பின்னர் வந்தால் உட்செல்ல முடியுமா என்று கேட்கிறான்.

''சில வேளை போகலாம்... ஆனால் இப்போது போக முடியாது!''

சட்டத்தின் வாசலோ எப்பொழுதும் போலவே திறந்திருக்கின்றது. காவலாளியும் ஒருபக்கமாக நிற்கிறான். நாட்டவனோ நன்றாக வளைந்து உள்ளே எட்டிப் பார்க்கின்றான். இதைக்கண்ட காவலாளிக்குச் சிரிப்பு வருகின்றது.



''உள்ளே போய்ப் பார்க்க வேண்டும் போலிருந்தால் என்னிடம் கேட்காமலேயே போகலாம். ஒன்று மட்டும் நினைவிருக்கட்டும், எனக்கு அதிகாரம் இருக்கிறதுதான். ஆனால் நான் ஆகக்கீழேஉள்ள காவலாளி. உள்ளே போகப் போக ஒவ்வொரு மண்டப வாசலிலும் காவலாளிகள் நிற்பார்கள். அதிகாரமும் போகப் போகக் கூடிக்கொண்டே போகின்றது மூன்றாவது காவலாளிக்கு முன் நானே போகமுடியாது.''

இப்படியெல்லாம் கஷ்டங்கள் இருக்குமென்று நாட்டவன் எதிர்பார்க்கவேயில்லை. சட்டமென்பது யாவரும் எப்பொழுதும் அணுகக்கூடியதாகவே இருக்கவேண்டுமென்று அவன் நினைத்துப் பார்த்தான் ஆனாலும் இப்பொழுது விலையுயர்ந்த ஆடையில் (Pelemantel — மிருதுவான தோல் ஆடை) நிற்கும் காவலாளியைக் கவனமாகப் பார்க்கும் போது — நீண்ட மூக்கு; மெல்லிய நீண்ட கரிய மொங்கோலியத்தாடி - பேசாமல் அனுமதி கிடைக்கும் வரை நின்று விடுவது நல்லதென்ற முடிவிற்கு வந்தான். காவலாளியும் அந்த நாட்டவனுக்கு தான் கால் வைப்பதற்குப் பயன்படும் இருக்கையைக் கொடுத்தான். வாசலின் ஓரத்தில் அமரவும் அனுமதித்தான். அந்த மனிதனோ மாதங்களாக, வருடங்களாக அங்கேயே இருக்கிறான். உள்ளே போய்விட எல்லா முயற்சிகளும் செய்து பார்த்தான்.

இவனது கெஞ்சல்கள் காவலாளிக்கு அலுத்துவிட்டது. காவலாளி அடிக்கடி இவனிடம் ஒரு சிறிய விசாரணையே நடத்திவிடுவான். இவனது நாட்டைப் பற்றியும் இன்னும் எத்தனையோ பிறகேள்விகள். யாவும் சம்பந்தா சம்பந்தமில்லாத, அனுமதிக்கு அவசியமேயற்ற பெரிய அதிகாரிகள் கேட்கும் கேள்விகள். இவற்றின் இறுதியில் இன்னும் நாட்டவனை உள்ளே அனுமதிக்க முடியவில்லை என்பதே திரும்பத் திரும்பக் காவலாளியின் பதில்.

தனது பயணத்திற்காக நாட்டவன் பலவற்றைக் கொண்டு வந்திருந்தான். காவலாளிக்குக் கைலஞ்சம் கொடுப்பதில் அவையும் தீர்ந்து போய்விட்டன. இவற்றை விடப் பெறுமதியானதையே இனிமேல் லஞ்சமாகக் கொடுக்கமுடியும். காவலாளியே எல்லாவற்றையும் எடுத்துக் கொள்கிறான் - அன்றியும், ''இந்த வழியில் முயற்சி செய்து பார்க்கவில்லையே என்று நீ நினைத்து விடக்கூடாது என்பதனால் தான் நான் இவற்றை ஏற்றுக் கொள்கிறேன்'' என்றும் கூறுகிறான்.

பல வருடங்களாக இந்த முதற்காவலாளியையே இடைவிடாது நாட்டவன் பார்த்துக் கொண்டிருந்ததால் ஏனைய காவலாளிகளைமறந்தேபோய் விட்டான். இந்த முதலாவது காவலாளியே சட்டத்தின் உள்ளே செல்வதற்கான ஒரே ஒரு தடையாக அவனுக்குத் தெரிகிறது,

முதல் ஒரு வருடம், பயமொன்றுமில்லாமல் சத்தம் போட்டு இந்தவேதனை நிகழ்ச்சிகளைத் திட்டித் தீர்த்தான். ஆனால் காலம் செல்லச் செல்ல அவனுக்கும் வயது ஏறிவிட்டது. மெதுவாகத் தனக்குள்ளாகவே தன்பாட்டில் புறுபுறுத்தான். பல வருடங்களாக இந்தக் காவலாளியையே பார்த்துப் பார்த்து காவலாளியின் உடுப்பின் கழுத்தில் இருக்கும் உண்ணி கூட இவனுக்குத் தென்பட்டது. காவலாளியிடம் அனுமதி வாங்கித் தருமாறு சிறு குழந்தையைப் போல அந்த உண்ணியைக் கூடக்கேட்டுப் பார்த்தான்.

முடிவில், இவனது கண்கள் பார்வை மங்கின. இருட்டிவிட்டதா அல்லது தனது கண்கள்தான் பார்க்க முடியாதிருக்கின்றதா என்று கூட அவனுக்குத் தெரியவில்லை. சட்டத்தின் வாசலினூடு அந்த இருட்டிலும் மங்காத பிரகாசம் ஒன்றை அவன் காண்கிறான். அதன் பின்னர் அவன் அதிக காலம் வாழவில்லை. இறந்துவிடு முன்பாக அவனது இதுகாலவரையிலான அனைத்து அனுபவங்களும், இதுவரை காவலாளியிடம் கேட்காத ஒரேயொரு கேள்வியைக் கேட்டுவிட அவன் சிந்தனையிற் சங்கமிக்கிறான்.

அசைவிழந்து கொண்டிருக்கும் தன் முது உடலை ஒரு நிலைப்படுத்த முடியாத நாட்டவனுக்கு, கைச்சைகைமூலமே மேற்கொண்டு காவலாளியுடன் பேச முடிகிறது. மூப்படைந்து, கூனி உடல் சிறுத்த நாட்டவனை விளங்கிக் கொள்ள காவலாளி நன்றாகவே கீழே குனிய வேண்டியிருக்கின்றது-

''இன்னும் என்னப்பா கேட்கப்போகிறாய்?... ஆவேசம் பிடித்த ஆளாயிருக்கிறாயே நீ...''

''எல்லோரும்தான் சட்டம் சட்டம் என்று சொல்கிறார்கள். ஆனால் உட்செல்லும் அனுமதிக்கு ஏன் என்னைவிட இவ்வளவு காலமும் ஒருவருமே வரவில்லை?''

இந்த மனிதன் தனது இறுதிக் கட்டத்தில் இருக்கிறான் என்று கண்ட காவலாளி, செவிடாகிக் கொண்டிருக்கும் நாட்டவனின் காதுகளுக்கு எட்டவும் வேண்டுமென்பதற்காகத் தொண்டை வைத்தான்.

''இந்த வாசல் உனக்காக மட்டுமே திறக்கப்பட்டிருந்தது. உன்னைவிட இதனூடு வேறு யாருமே அனுமதி பெற முடியாது. இதோ இப்பொழுதே இதை நான் மூடிவிட்டுப் புறப்படுகிறேன்.''

ஜேர்மன் மொழி மூலத்திலிருந்து
தமிழில் : ந. சுசீந்திரன்

## 'அறவழி'...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக 'எழுத்தாளனும் வாசிப்பும்' என்னும் தலைப்பில் இரா.சிவச்சந்திரன் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து பயிற்சி பற்றிய கலந்துரையாடலும், மதிப்பீடும் இடம் பெற்றன. பயிற்சியாளர்கள் பலரும் தத்தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.— இவர்களது கருத்துக்களை அவதானிக்கும் போது, இத்தகைய பயிற்சிப் பட்டறைகள் பல, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் - மூலை முடுக்குகளிலும் - நடைபெற வேண்டுமென்பதை உணரமுடிந்தது. நாட்டில் உள்ள அனைவரும் எழுத்தாளர்களாகமாறவேண்டும் என்ற அர்த்தத்தில் இப்படிக் கூறவில்லை; நல்லஎழுத்துக்களை இனங்கண்டு வாசிப்பதற்கு இப்பயிற்சி வழி வகுக்கும் என்பதாலேயே, இப்படிக் கூறினேன்.

மேலும் காலாதி காலமாக ஆண்- பெண் தொடர்பாக எமது சமுதாயத்தில் பேணப்பட்டு வருகின்ற சில போலி மரபுகளும், சம்பிரதாயங்களும் இன்றும் முழுமையாகக் களையப்படவில்லை. அவற்றைமாற்றுவதற்குப் பரஸ்பர புரிந்துணர்வு வேண்டும். அத்தகைய புரிந்துணர்வு ஏற்படுவதற்கு, இப்பட்டறை வழிவகுக்கிறது. அதாவது இளம் பெண்களில் அநேகம் பேர், அனைத்து ஆண்களையும் அந்நியர் போலவே நினைத்திருந்தோம்; இப்பட்டறையில் கலந்து கொண்ட பின்னர்தான், பெண்களைத் தங்கள் உடன் பிறந்த சகோதரிகளாக மதிக்கின்ற ஆண்கள் அதிகம்பேர் உள்ளனர் என்பதை உணர முடிந்தது என்று தெரிவித்தனர். இதுபோலவே, சமுதாயஒழுக்க நிலைப்பட்ட ஏனைய அம்சங்களிலும் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படுவதற்கு இத்தகைய பட்டறைகள் வழிவகுக்கும் என்பதால், தொடர்ந்தும் நடைபெற வேண்டும்; அவற்றில் பெருமளவு இளைஞர்-யுவதிகள் பங்கேற்கவேண்டும் என்ற கருத்து, பெண் எழுத்தாளர்களினால் அழுத்திக் கூறப்பட்டது.

பட்டறையின் இறுதி நிகழ்ச்சியாக பேராசிரியர் கா.சிவத்தம்பி தொகுப்புரை வழங்கினார். இலக்கியத்தில் மனித உணர்வு நிலைப்பட்ட தன்மைகளின் முக்கியத்துவம் குறித்த பேராசிரியரின் விளக்கம், அனைவரது நெஞ்சையும் நெகிழ வைத்தது.

அறவழிப் போராட்டக் குழுச் செயலாளர் க.ஜீவகதாஸ் நன்றியுரை வழங்கும் போது, பயிற்சியாளர்களின் வேண்டுகோள்களை ஏற்றுக் கொண்டு தொடர்ந்தும் இது போன்ற பட்டறையினை நடத்த ஆவன செய்வதாகக், குறிப்பிட்டார்.

இப்பட்டறை, எதிர்பார்த்ததிலும் விட மிகச்சிறப்பான- உயர்வான- பெறுபேற்றினைத் தந்த திருப்தியினை அறவழிக் குழுவினரிடமும், நெறிப்படுத்திய கலாநிதி மௌனகுருவிடமும், பயிற்சியாளர்களிடமும் காணமுடிந்தது. □

# இளவட்டம்

## வலைக் கயிறுகள்

நடு நிசிக்கு
அகராதிகள் தரும்
கரும் பதத்தை—
அவர்கள் தரும்
அநுபவப் பதம்
மிகைத்து விடுகிறது!

ஊர்ச் சேவல்களும்
அவர்களின்
அரவங்களைத்தான்
விழிப்புக் குறிகளாய்
நம்பியுறங்குகின்றன!

வைகறைகள்
அவர்கள்
வதனங்களில்
விடிவதைத்தான்
வாடிக்கை
ஆக்கி விட்டன!

கடல் கூட
வற்றாமலிருப்பதும்
அவர்களுக்காகத்தான்!

கதிரவனின்
கன்னிக் கதிர்கள்
முதலில்—
கருக்குவதும்
அவர்களைத்தான்!

எண்ணற்ற
இன்ப ராகங்களும்.
அவர்களிடம்தான்
பிறக்கின்றன...
ஆனால்—
அவர்களுக்கு
ராக ரசனைதான்
இம்மியளவுமில்லை!

அவர்கள்தான்;
வலைக் கயிற்றை
இழுத்து! இழுத்து!!
வலைக் கயிறாகவே
வடிந்து போன
மீனவத் தோழர்கள்!

— நீலாவணையூர் அல்ஜ்

## உளவளப் பாதிப்பு

மூத்த மகன் டென்மார்க்கில்
அடுத்த மகன் இங்கிலாந்தில்
அடுத்தவர் ஜேர்மனியாம்
கடைக்குட்டி கனடாவாம்
எல்லோரும் வெளியில்
என்று ஐயாவின்
பத்தினி— 'அவரையும்'
போகட்டாம் வெளியில்;
அவரும் போகிறார்
கைதடி பஸ்ஸில்

எங்கே என்றேன்—
அனாதை விடுதிக்காம்!

—சபா. புஷ்நான்

## தனிமை

ஏ மனிதர்களே!
ஏன் என்னைத் தனியே
விட்டுவிட்டு ஓடுகிறீர்?

தனிமைச் சிறையிலே
தவிக்கின்றேன் நான்.

என் மனத்திரையில்
நிழல் பதித்த நீங்களா?
இப்போது
மௌன விரதம்
பூண்டுள்ளீர்?

தனிமையோடு போராடும்
நான்
தேடுவது உருவங்களை அல்ல;
உள்ளங்களையே!

இதயம் உள்ளோர்க்கு
மட்டும்தான்
எனது இதயத்தின் பாடல்
எதிரொலிக்கும்!

—தமிழ் நேசன்

## வேர்களும் இலைகளும்

வெளிச்சங்கள் அணைக்கப்
படும் போதுகூட
விம்பங்கள் உணரவில்லை, தம்
மரணங்கள் நிச்சயிக்கப்
பட்டதை

வேர்கள் அறுக்கப்படும் போது
கூட
இலைகள் உணரவில்லை, தாம்
சருகுகளாகப் போகின்றோம்
என்பதை.

நிலவு தேய்ந்து போகும்
போதுகூட
வானம் உணரவில்லை, தான்
இருண்டு விடப் போவதை.

நாக்குகள் துண்டாடப்படும்
போதுகூட
நாங்கள் உணரவில்லை நாம்
ஊமைகளாக்கப்படுகின்றோம்
என்பதை.

இரஞ்சி. இராஜநாயகம்

## கண்ணீரை மறைத்துக்கொள்

பெண்ணே!
கண்ணீரை மறைத்துக்கொள்
மகிழ்ச்சியை வரவழைத்துக்
கொள்
உனது வேதனை எனக்குப்
புரிகிறது.

விதம் விதமான நிறங்களுடன்
சிறகடித்துப் பறக்கும்
இந்தப் பறவைகள்போல்
வாழ முடியவில்லையே என
ஏங்குவது எனக்குப் புரிகிறது.

பெண்ணே!
வறுமையின் நிழல்
உன்னைத்தொடர்கின்றபோது
உனது கனவுகள் நனவாகாது
போகலாம்,
உனது ஆசைகள் நிறை
வேறாது போகலாம்.
ஆனாலும் அவற்றை நீ
தொலைத்து விடாதே
அவையில்லாமல் உன்னால்
வாழமுடியாது!

— துர்வாசன்

# 1989இல் மார்க்சியவாதத்தின் தொபபூழ்க்கொடி வெட்டப்பட்டது

— மார்க்ஸ்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ப: ''அதுக்கென்ன இப்ப'' என்றுமார்க்ஸ் பதிலளித்தார், மார்க்சியவாதம் பல்வேறு மரபுகளாகக் கிளைவிடத் தொடங்கியது. மேலே நீங்கள் குறிப்பிட்டது ஒரு மரபு; தொடக்கத்தில் அது சாத்தியப்படக்கூடியதொன்றாகத் தோன்றிற்று. பிரச்சினை என்னவென்றால் அதுவே மார்க்சியவாதமாய், உத்தியோகபூர்வ கோட்பாடாய் மாறிற்று. இரண்டாம் அகிலம் போன்ற மற்றைய சிந்தனைக்குழாம்கள் எல்லாம் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டு வெளியே சூழ்ந்திருந்த இருளுக்குள் தள்ளப்பட்டன. இதன் விளைவாக, மேற்கிலே வளர்ந்த மார்க்சியவாதம் அழிக்கமுடியாதவாறு கிழக்குடனும், பின்தங்கிய நிலையுடனும், சர்வாதிகாரத்துடனும் தொடர்புபடலாயிற்று. ஜனநாயகத்திலிருந்து சோசலிசம் அன்னியப்படுத்தப்பட்டது. இது துன்பியல் தன்மை வாய்ந்தது.

ஒளிவுமறைவின்றி மார்க்ஸ் இவ்வாறு பேசியது எனக்கு வியப்பாகவிருந்தது. ஆனால் அவர் முதலில் தத்துவஞானி, இரண்டாவதாகத்தான் பக்கஞ்சார்ந்தவராய் இருந்தார் என்று எனக்குள் தெளிந்து, பின்வருமாறு கேட்டேன்: ''ஆனால் உங்கள் பெயரில் நடைபெற்றவற்றிற்கு, ஓரளவு பொறுப்பேனும் நீங்கள் ஏற்கத்தானே வேண்டும் உங்களது உலகப் பார்வையில் அதிகாரித்துவப் போக்கிற்கான வித்துக்கள் உள்ளடங்கியிருக்கவில்லையா?''

ப: வரலாற்று நியதிகள், சோசலிசத்தின் தவிர்க்க முடியாமை போன்றவற்றிற்கு நாம் கொடுத்த அழுத்தத்தின் விளைவாக, நாம் ஒருவகை சுயஒழுக்கத் தற்பெருமைக்கு, உயர் குழாம் வாதத்திற்கு, குறிக்கோளே அதனை எய்துவதற்கான வழிமுறைகளை நியாயப்படுத்துகின்றது என்ற எண்ணத்திற்கு ஆளாகி அவற்றை நம்பினோம். ஆனால் கடவுள் சாட்சியாக, நான்தான் ஸ்ராலினிற்குப் பொறுப்புஎன்று உண்மையாக நம்புகிறீர்களா?

கே: ஆனால் விவாதங்களிலும், கண்டனங்களிலும் நீங்கள் கையாண்ட பாணி உங்களுடைய சீடர்களுக்குத்தீய உதாரணமாக அமையவில்லையா? உங்களுடைய பாணியில் சகிப்புத்தன்மை குறைவாகவே உள்ளது. லெனின் உட்பட, பலர் இதனைப் பின்பற்றினார்கள்.

மார்க்ஸ் முகத்தைச் சுழித்துக்கொண்டார். கைகளை வேகமாக அசைத்தவாறு அவர் சொன்னார்: ''அது, குறிப்பாக இலண்டனிலிருந்த அகதி வட்டாரங்களில், எமது காலத்தின் பண்பாட்டிற்குரியது. எப்படியிருப்பினும் நான் சந்தித்திருக்காத மற்றவர்களின் நடத்தைக்கு நான் பாத்திரவாளி அல்ல.''

கே: உங்கள் எழுத்துக்களில், முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத விளைவு சோசலிசம் என்ற கருத்து விரவிக் காணப்படுகிறது. மிகக் கூர்மையான, அசாதாரண தீட்சண்யத்துடன் முதலாளித்துவம் பற்றி நீங்கள் எழுதினீர்கள். அதன் விளைவாக தம்மை மார்க்சீயவாதிகள் எனக் கனவில்கூட அழைத்துக் கொள்ளாத பலர்மீது இன்று உங்கள் கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. புரட்சிகள் பற்றி, குறிப்பாக 1848 பற்றியும் பாரிஸ் கொம்யூன் பற்றியும் நீங்கள் அதிகம் எழுதினீர்கள். ஆனால் சோசலிசத்தைப் பற்றி நீங்கள் எழுதியது மிகக் குறைவே. பொல்செவிக்குகள் ஆட்சியைக் கைப்பற்றிய போது, அவர்களுக்கு 'முதுசமாக'க் கிடைத்தது, ஏறக்குறைய எழுத்தால் நிரப்பப்படாத வெறும் கடதாசித் துண்டே.

ப: நேரகாலம்வந்ததும்என்ன செய்யப்படவேண்டும் என்பது ஒப்பீட்டளவில் தெளிவாகிவிடும் என நாம் கருதினோம் போலும். ஒருவகை கற்பனாவாதத்திற்கு உட்பட்டிருந்தோம் என்ற குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இருக்கின்றது என நினைக்கிறேன்.. இன்னொரு காரணம் அது பிரதானமாக முதன்மைப்படுத்தப்படவேண்டியது என எமக்குப் படவில்லை. சோசலிசம் எதிர்காலத்திற்குரியது; முதலாளித்துவத்தைப்புரிந்து கொள்வது சோசலிசத்தைப்பற்றிக் கனவு காண்பதை விட முக்கியமானதாய் எமக்கு எப்பொழுதும் தோன்றியது.

கே: சரி, முதலாளித்துவத்தைப் பற்றிக் கதைப்போம், நீங்கள் இரண்டு ஆருடங்கள் கூறினீர்கள்: மூலதனம் மேலும் மேலும் குவிமையப் படுத்தப்பட்டு வரும், அதனால் அது தனியாரிடம் சுவறும் தன்மை இன்னும் வெளிப்படையாகும். 2) பாட்டாளி வர்க்கம் தொகை அளவில் பெரும் வளர்ச்சி அடைந்து மிகப் பெரும்பான்மையினராக இருப்பர். அவர்களே புதிய சமுதாயத்தை, சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். 2ஆவது ஆருடம் பொய்யாகி விட்டது: பாட்டாளி வர்க்கம் வேகமாகச் சுருங்கிக் கொண்டு வருகின்றது; உழைக்கும் மக்கள் இடையே பல்வேறுபட்ட தன்மையே கூடுதலாக வளர்ந்து வருகின்றது.

ப: வரலாறு பற்றி நாம் முதலில் தெளிவடைவோம். நான் உலகத்திலிருந்து மறைந்த பின்னர், ஐரோப்பா முழுவதிலும் பாட்டாளி வர்க்கம் மிகவேகமாக வளர்ச்சியுற்று வந்தது. இது 1945 வரை பொருந்தும்; 1950 களிலேதான் வேலை செய்யும் படையின் விகிதாசாரத்தில் பாட்டாளி வர்க்கம் குறைந்து வரத்தொடங்கியது. மேலும், நாம் கருதியிருந்தது போல, பாட்டாளி வர்க்கம் படிப்படியாகத் தன்னை ஒழுங்கமைப்புச் செய்து, வர்க்கப் பிரக்ஞையையும் கூடுதலாகப் பெற்றுள்ளது.

கே: நீங்கள் கூறுவது ஐரோப்பாவிற்குப் பொருந்தும். ஆனால் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அத்துணைப் பொருத்தமில்லை.

ப: உண்மை. ஆனால் அமெரிக்காவை நாம் பொதுவாகவே செம்மையாகப்புரிந்து கொள்ள வில்லை, அது தவிர பாட்டாளி வர்க்கத்தின் கை மேலோங்கும் என்ற ஆருடம் 1950 களிலிருந்து பொய்ப்பிக்கப்படத் தொடங்கியது. பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட யுகத்தின் தன்மையே ஒழிய, நிரந்தரப் போக்கல்ல என்பது இப்பொழுதுதெளிவு. இப்பொழுது பாட்டாளி வர்க்கம் தொகை அளவில் குன்றி வருகின்றது; 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரித்தானியாவில் உழைக்கும் மக்கள் தொகையில் பாட்டாளி வர்க்கம் 20 வீதத்திற்குக் குறைவாகவே இருக்கும்

கே: சரியாகச் சொன்னீர்கள். மாற்றத்திற்கு வழிகோலுவதில் தொழிலாளர் வர்க்கத்தின் முக்கியத்துவம் பற்றி நீங்கள் கூறியது ஒரு காலத்திற்குச் சரியாக இருந்தது. ஆனால் அந்த யுகம் முடிந்து விட்டது. தொழிலாளர் வர்க்கம் வீழ்ச்சியுற்று வருகின்றது. நீங்கள் சொன்ன சோசலிசத்திற்கு அடிகோலும் முகவர் இப்போதில்லை.

ப: ஒப்புக்கொள்கிறேன். இது தான் நாம் விட்ட பெரும் தவறு. நான் மறைந்த பின்பு ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு நாம் சொன்னது சரியாக இருந்தது; ஆனால் இப்பொழுது அல்ல. இது கணக்கில் எடுக்கப்பட வேண்டிய ஒரு சாதனை. கிழடு தட்டிய மார்க்சோடு வரலாறு சமனாக எட்டி நடைபோடுகின்றது. சோசலிசம் பற்றிய எமது எண்ணக் கருவை நாம் மீளாக்கம் செய்ய வேண்டும் என நினைக்கின்றேன். மாற்றத்திற்கு வழிகோலும் முக்கிய பாத்திரமான பாட்டாளிவர்க்கம் இல்லாத சோசலிசத்தை எவ்வாறு அர்த்தப்படுத்துகிறது. மீண்டும் 'அ'விலிருந்து தொடங்க வேண்டியதுதான்.

தனது சிந்தனையின் அத்திவாரத்தையே தகர்க்கக்கூடிய மெய்ம்மைகளையே நேருக்கு நேர் எதிர்கொள்ள மார்க்ஸ் தயாராக இருந்தமைஎன்னைக் கவர்ந்தது. இதனை நான் வெளிப்படையாகவே அவருக்குச் சொன்னதும், தனக்கு மிகப்பிடித்தமான லத்தீன் மேற்கோள் ஒன்றினை ஒப்புவித்தார். அதன் அர்த்தம்: எல்லாவற்றையும் பற்றி நீ ஐயம் கொண்டிருத்தல் வேண்டும். 'தொண்டையை நனைப்பதற்கு' நேரமாகிவிட்டது. அவருக்கு 'வைன்' பிடிக்கும் என்பது நினைவிற்கு வந்தது. நான்கொடுத்த'வைனை'அவர் ஆர்வத்தோடுஏற்றுக்கொண்ட போதிலும், இதனை விட திறமான 'வைன்' கிடைக்கவில்லையே எனச் சற்று ஆச்சரியம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தார்: ''எனது இரண்டு ஆருடங்களில், ஒன்றைப்பற்றித் தான் பேசியிருக்கிறோம். மற்றையது மிகத்திட்பநுட்பமாகச் சரி வந்துள்ளது என்று எனக்குப் படுகின்றது. கொம்பனிகளுக்கு உள்ளே பரவலாக்கும் போக்குகள் காணப்படுகின்ற போதிலும், மூலதனம் மிகப் பெருமளவில் குவிமையப்படுத்தப்பட்டிருக்கின்றது. உலகளாவிய பெரும் கொம்பனிகளைப் பாருங்கள். மேலும், முதலாளித்துவம் புரட்சித்தன்மை வாய்ந்த அமைப்பு என்பதனை நான் எப்பொழுதும் வலியுறுத்தினேன். அதன் உள்ளார்ந்த ஆற்றல்களை அது தீர்த்து விட்டது என நான் ஒருபோதும் கூறியதில்லை. ஆனால் 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலாளித்துவத்தின் உயிர்த்துடிப்பைக் கண்டு நானே ஆச்சரியப்படுகின்றேன்.

(அடுத்த இதழில் முடியும்)

# மேற்கு ஜேர்மனி: அரவணைத்த அகதிகளின் இன்றைய நிலை



## உருளும் உலகில்

சென்ற 30ஆண்டுகளாக மேற்கு ஜேர்மனி அகதிகளை இன, மொழி, மத வேறுபாடின்றி அணைத்தே வந்துள்ளது. 60களில் கடின உழைப்பாளர்களை அது இருகரம் நீட்டி வரவேற்றது. நாட்டின் உழைக்கும் வயதினர் மிகக் குறைவாகவும் தேசிய வருமானம் மிக அதிகமாக இருந்ததுமே இதற்கான காரணங்களாகும். எனினும் இன்று பிறநாட்டவர்களைக் கண்டு மேற்கு ஜேர்மனி மக்கள் முகம் சுழிக்கத் தொடங்கிஉள்ளனர். கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோவியத் யூனியனிலும் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் அந்த நாடுகளில் விடுதலை அலையையும், அதே சமயம் இன உணர்வுகளையும் தோற்றுவித்துள்ளன நாஜிகளின் கொள்கையில் இருந்து வேறுபட்ட ஜேர்மனியர்களும், யுத்தத்துக்காகச் சென்ற ஜேர்மன் போர்வீரர்களும் சோவியத்திலும் கிழக்கு ஐரோப்பியநாடுகளிலும் தங்கிவிட்டனர். அந் நாடுகளின் சமீப இன உணர்வுகள் அவர்களை ஜேர்மனிக்குள் வரவைத்துள்ளது தொலைவில் உள்ள மத்திய சோவியத் ஆசியக் குடியரசுகளில் இருந்து கூட,அகதிகள் வரத்தொடங்கியுள்ளனர். போலந்தின் இன்றைய பல பகுதிகள் 1944 இற்கு முன்பு ஜேர்மனியுடன்இணைந்திருந்தன. வெளியேறும் விதிகள் தளர்த்தப்படவே, பொருளாதார வளம் மிக்க தமது தாய் நாட்டை நோக்கி, ஜேர்மன் மொழியை எழுத வாசிக்கத் தெரியாத போலிஷ் ஜேர்மன் அகதிகள் வரத் தொடங்கியுள்ளனர். பெர்லின் சுவர் உடைக்கப்பட்டதைப் பயன்படுத்தி இதுவரை 720,000 பேர் கிழக்கு ஜேர்மனியில் இருந்து வந்துள்ளனர்.

கெடுபிடி யுத்தகாலத்தில் (1951) கட்டப்பட்ட அகதி முகாமும் அதனை அண்டிய பகுதிகளுமே, இன்றும் ஆரம்ப வரவேற்பு இடமாக இருக்கின்றன. இதில் 3000 அகதிகள் வரையே தங்கலாம். வரும்ஒவ்வொருவருக்கும் 1000 மார்க் முதலில் உதவித்தொகையாகக் கொடுக்கப்படுகிறது. மற்றைய ஜேர்மன் அகதிகட்கு ஜேர்மன் மொழி 10வாரங்கட்குப் பயிற்றப்பட்ட பின்பே, வெளியே விடப்படுகின்றனர். கடந்த காலங்களில் அண்டைய நாடான போலந்தில் இருந்து பெருந்தொகை போலிஷ் மக்கள்பொருளாதாரவளம்தேடி, ஜேர்மனியில் குடியேறி உள்ளனர். சென்ற காலங்களில் மிக அன்புடன் நடத்தப்பட்டஅவர்கள் இன்று இனங்கண்டுகொள்ளப்பட்டு வசவுக்கும் ஏச்சுக்கும் ஆளாகிறார்கள்.மற்றைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரும் அரை ஜேர்மனியர்கட்கும் கிழக்கு ஜேர்மனியர்கட்கும் இடையில், மிக அதிக அளவில் வேறுபாடுகள் காட்டப்படுகின்றன.பின்னவர்களே உண்மையான ஜேர்மனியர்கள்என்ற எண்ணத்துடனேயே அதிகாரிகள் செயற்படுகின்றனர். 30 வருட கால ஜேர்மன் வாசியான ஓர் துருக்கியரின் கருத்துப்படி, இனிமேல் அதிகம் பாதிக்கப்படப் போகிறவர்கள் முஸ்லிம் அகதிகளும், ஆசியர்களுமே. மற்றவர்கள் எப்படி இருப்பினும் நிறத்தாலும், மத உணர்வுகளாலும் ஒன்றாகி விடுவார்கள் என்கிறார் அவர். தினமும் 2000அகதிகள் கிழக்கு ஜேர்மனியில் இருந்து வருகிறார்கள். சென்றஆண்டு அகதிகளுக்காக 6பில்லியன் ஜேர்மன்மார்க்குகள் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் மேற்குஜேர்மனியிலும் இன்று வேலைஇல்லாப் பிரச்சினை தலைதூக்கியுள்ளது. மிக வலதுசாரி அமைப்புகள், அகதிகளை அனுமதிக்கும் விதிகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வற்புறுத்திவருகின்றன. இப்படிப் பிரச்சினைகள்முற்ற, பல வெளிநாட்டவர்கள் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும்.பல காலமாக வேலை செய்தவர்கள் கூட ஊக்குவிப்புத் தொகை கொடுக்கப்பட்டு, வேலையில் இருந்து நின்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஜேர்மனியர்கள் மிகவும் கூடிய தேசிய உணர்வும், இன உணர்வும் கொண்டவர்கள். கிழக்கு ஜேர்மன் மக்கள்வரத்தொடங்கிய காலத்தில் இருந்து இது மிகவும்தெளிவாகத் தோன்றத் தொடங்கியுள்ளது. இதனைப் பற்றி ஓர் சமூக சேவகியிடம் வினவப்பட்டபோது. ஆகிய அகதிகள் அதிகபிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களைக் கொண்டவர்களாகவும், குற்றங்கள் பல செய்பவர்களாகவும், தொழில் நூட்ப அறிவு குறைந்தவர்களாகவும் வேலையற்றவர்களாகவும் இங்கு உள்ளனர் என்கிறார். அத்துடன்,இக்காரணங்கள் எல்லாம் சேர்ந்து, காலாவதியாகிப் போன அகதிகள் அனுமதிக்கப்படும் விதிகளில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற கருத்துப் பெருகி வருகிறது. ஆயினும் ஜேர்மனியர்களைப் பொறுத்த அளவில், இது பொருந்தாது. எந்நாட்டு ஜேர்மன் மொழிபேசுவோரும்அங்கு உடனே வர, மேற்கு ஜேர்மன் அரசியலமைப்பு வகை செய்துள்ளது. பெருகி வரும் அகதிகள் தொகை. இரு ஜேர்மனியர்களும் விரைவில் ஒன்றுசேர வேண்டும் என்றஎண்ணத்தை, மேற்குஜேர்மனிக்கு உண்டாகி உள்ளது. ஆனால் பெரும் பொருளாதாரச் சிக்கலில் உள்ள கிழக்கு ஜேர்மனியில் இருந்து அதுவரை பொறுத்துக் கொண்டுஇருப்பவர்கள், குறைவாகவே உள்ளனர். பழமை வாய்ந்த தொழில் நுட்பத்துடன் இயங்கும் கிழக்கு ஜேர்மன் தொழில்துறையை மறுசீரமைக்கும் பணியில் மேற்கு ஜேர்மன் ஈடுபட வேண்டி இருக்கும், அத்துடன் அல்லாமல் இரு ஜேர்மனிகள் இணைவதில் கூட, பல சிக்கல்கள் உள்ளன. இரு வல்லரசுகளும் இவ்விடயத்தில் வேறுபடுகின்றன. முதலில் முற்றாகவே இணைப்பை எதிர்த்த ரஷ்யா, இன்று நடு நிலைமையான அந்நியப்படைகள் அற்ற ஜேர்மனியை ஆதரிக்கிறது. கிழக்கு ஜேர்மனியே மேற்கின் ஆதரவில் தங்கி இருக்கும் நிலையில் உள்ளதால், தொடர்ந்தும் ஜேர்மனி ‘நேட்டோ’ அமைப்பில் இருக்க வேண்டும் என்கிறது அமெரிக்கா.இணைக்கப்பட்ட ஜேர்மனி இராணுவ பலத்தைமிகவிரைவில் அடைந்து, இருமகா யுத்தங்களில் நடந்ததைப் போன்ற நிலை வருங் காலங்களில் ஏற்பட்டு விடும் என பல ஐரோப்பிய நாடுகள் அஞ்சுவதால், அவை அமெரிக்காவை ஆதரிக்கின்றன. இப் போக்குகள் இவ்வருட முடிவுக்குள் இரண்டு ஜேர்மனிகளும் இணைவது சாத்தியமற்றது என்பதையே காட்டுகிறது.

□ சு. மகேந்திரன் □

விரைவில் இணைப்பு உருவானால் கிழக்கு ஜேர்மனிக்கான தொழில் துறை வளர்ச்சி பெருக, அகதிகள் வருகை குறைந்துவிடும். அப்படி நடந்தால், இலங்கைத் தமிழ் அரசியல் அகதிகள் போன்றோர் அதனால் பலன் அடைவர், சுவர்கள் உடைந்தபோது குதூகலித்தோம்: இப்போது அதுவே எம்மை அமிழ்த்திவிடும் போல் உள்ளது என்கின்றனர், மேற்கு ஜேர்மன்மக்கள்

—சிரித்தபடியே!

# அபகீர்த்தி மிக்க இந்திய அமைதிகாக்கும் படை

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய சர்வதேச விதிமுறைகளிற்கும், தார்மீக அடிப்படைகளிற்கும் சற்றும் பொருத்தமற்ற ஒரு அமைதிப் படையை இலங்கைத் தமிழர்களும் சந்தித்தார்கள். சமாதானத்திற்குரிய நோபல் பரிசை சர்வதேச அமைதிப் படை வெற்றி கொண்ட ஆண்டாகிய 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி இந்தியா ஒரு அமைதி காக்கும் படையை இலங்கைக்குள் இறக்கியது.

இந்தியர்கள் தான் (குறிப்பாக ராஜீவ் அரசு) அதை சாந்தி சேனா - அமைதிப் படை - என்றார்கள். ஆனால் துன்புறுத்தப்பட்ட தமிழர்களோ அதை அமைதி கொல்லும் படை (Peace Killing Force) என்றோ அல்லது அப்பாவிகளைக் கொல்லும்படை என்றோ (Innocent People Killing Force) வெறுப்போடு சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டின் முதலமைச்சர் கருணாநிதியும் அது, ‘தமிழர்களைக் கொன்றபடை’ என்று சொல்லிவிட்டார். அதை ராஜீவ் காந்தி அனுப்பியபடையென வர்ணிக்கும் அவர், முழு இந்தியப் படையிலிருந்தும் அந்தப்படையைப் பிரித்துப் பார்க்கிறார்.

இவ்வாறு பெருமளவு கெட்ட பெயரையே சம்பாதித்துக் கொண்ட அந்த இந்தியப்படை இலங்கையில் 32 மாதங்கள் நிலைகொண்டிருந்தது. இதில் பெரும்பாலான காலங்களில் அது ஒரு கேவலமான யுத்தத்தில் ஈடுபட்டது.

எத்தகைய யுத்த தர்மந்திற்குள்ளும் வகைப்படுத்த முடியாத குரூர யுத்தம் அது. நிராயுதபாணிகளான பொது சனங்கள் 5000 இற்கும் மேலானோர் கொல்லப்பட்டனர். 4000 இற்கு மேலானோர் காயமடைந்தனர். லட்சக் கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டனர். 1000 இற்கும் கூடுதலான பெண்கள் சிதைக்கப்பட்டனர். 2000 இற்கும் குறையாத பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். கோடிக் கணக்கான சொத்துக்களிற்கும் உடமைகளிற்கும் நாசமேற்பட்டது.

இந்த வீணான யுத்தத்தில் இந்தியா 300 மில்லியன் ரூபாய்களை விரயமாக்கியது. அவர்களின் கணக்குப்படி துருப்புக்களில் அதிகாரிகளும் உட்பட 1155 பேர் கொல்லப்பட்டனர். 2984 பேர் காயமடைந்தனர். 1987 ஒக்டோபர் 10 இல் ஆரம்பமான யுத்தம் 1989 செப்ரெம்பரில் முறையான யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்படும் வரை நீடித்தது.

ஒரு அமைதிப்படைக்குரிய குணாம்சங்கள் எதையும் கொண்டிராத இந்தியப்படை தமிழர்களோடு காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டது. பலம்பொருந்திய ஒரு எதிரி நாட்டோடு மட்டும் பாவிக்கப்படக்கூடிய T 72 ரக கவச வண்டிகளையும் MI 25 ரக ஹெலிகொப்டர்களையும், வானிலிருந்து போடப்படும் 250கிலோ எடையுள்ள குண்டுகளையும் அது தமிழருக்கெதிராகப் பாவித்தது. 1987 ஒக்டோபர் 10ம் திகதியோடு ஆரம்பமான யாழ் நகரத்தைக் கைப்பற்றுவதற்கான ‘ஒப்பரேஷன் பவானி’ல் தொடங்கி, 1989 செப்ரெம்பர் வரையிலும் வெற்றி பெறாத பல ராணுவ நடவடிக்கைகளை இந்தியப்படை மேற்கொண்டது.

வன்னியில்: ஒப்பறேஷன் செக்மேற் (i), (ii), விராட், வஜிரா, பாஸ், ஸ்ரோம்

மன்னாரில்: ஒப்பறேஷன் திரிசூல

மட்டக்களப்பில்: ஒப்பறேஷன் மகா கிருத்திய.

ஒரு அமைதிப்படை மேற்கொள்ளக் கூடாத, மேற்படி ராணுவ நடவடிக்கைகளின் போது துருப்புக்கள் மிகவும் களைத்துப் போனவர்களாகவே காணப்பட்டார்கள். திட்டவட்டமாக இனங்காண முடியாத எதிரியின் பொருட்டு சதா தற்காப்பு நிலையிலிருப்பது அவர்களிற்கு எரிச்சலூட்டுவதாயிருந்தது. மொழியாலும், சனங்கள் அவர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பாலும், பயத்தினாலும் சனங்களிடமிருந்து வெகுவாகத் தனிமைப் பட்டிருந்தார்கள். எதிரியைத் தவறவிட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் அப்பாவிகளான சனங்களையே வதைத்தார்கள். தோல்வியும், இயலாமையும் அவர்களை மேலும் மூர்க்கங் கொள்ள வைத்தன. கொலை செய்வதற்கும், சித்திரவதை செய்வதற்கும் கிடைத்த சந்தர்ப்பங்கள் எதையும் அவர்கள் தவறவிடவில்லை. பெண்களின் தனிமைக்கு அவர்கள் எப்பொழுதுமே அச்சுறுத்தலாக இருந்தார்கள்.

ஒரு அமைதிப்படை இவ்வளவு தொகையில் பொது சனங்களைக் கொன்றதும், பெண்களிடம் மிருகத்தனமாக நடந்து கொண்டதும் யுத்த வரலாற்றிலேயே இதுதான் முதல் தடவை.

ஒரு அமைதிப்படை எந்த இரு இனங்களிற்குமிடையில் அமைதியைப் பேணவென்று வந்ததோ, அந்த இரு இனங்களிற்குமே அதன் பிரசன்னம் பயமுறுத்தலாயும், எரிச்சலூட்டுவதாயும் அமைந்ததென்பது யுத்த வரலாற்றிலேயே இது தான் முதல் தடவை.

அநேகமாக, இதுவரைகாலமும் உருவாக்கப்பட்ட எல்லா அமைதிப் படைகளோடும் ஒப்பிடுகையில் உலகிலேயே மிகவும் அபகீர்த்திக்குள்ளாகிய, சர்ச்சைக்குள்ளாகிய ஓர் அமைதிப்படை, இந்திய அமைதிப் படையாகத்தான் இருக்க முடியும்.

சுதந்திரமடைந்தபின் இந்தியா தன் துருப்புக்களை சர்வதேச அமைதிப்படைக்கென பலமுறை அனுப்பியிருக்கிறது. தவிர தனது துருப்புக்களை இந்தியத் துருப்புக்களாகவே நேபாளத்திற்கும் பங்களாதேஷிற்கும், மாலை தீவுகளிற்கும் இந்தியா அனுப்பியிருக்கிறது. ஆனால் தன்னுடைய சொந்த அமைதி காக்கும் படையை — இந்திய அமைதி காக்கும் படையை — ஒரு வெளிநாட்டிற்கு அனுப்பியதென்பது இந்தியாவைப் பொறுத்தவரை இதுதான் முதல் தடவை. இந்த ‘அமைதிப்படையின்’ தளபதி லெப்ரினன்ற் ஜெனரல் ஏ. எஸ் கல்கட், இந்திய சஞ்சிகையொன்றில், ரி. எஸ் சுப்பிரமணியனிற்கு வழங்கிய பேட்டியின் ஓரிடத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:

(11ஆம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகள்

## 1-5-90 செவ்வாய

தமிழீழ மக்கள் விடுதலை முன்னணியின் மாபெரும் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அலங்கார ஊர்திகளின் பவனியும் இடம் பெற்றது. மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய அன்ரன் பாலசிங்கம், ''தற்போதைய பேச்சுகள் தோல்வியுற்று அடக்கு முறை திணிக்கப்பட்டால், மீண்டும் தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்போம்'' என்று குறிப்பிட்டார் □ ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு ஜி. சி. எஸ். யூ. வுடன் இணைந்து கொழும்பில் மேதினக் கூட்டத்தை நடத்தியது □ கொழும்பில் நடைபெற்ற ஐ. தே. க.மே தினத்தில்உரையாற்றிய ஜனாதிபதி, ''சகல இன மக்களுக்கும் எனது அரசு நீதி வழங்கும்'' எனக் குறிப்பிட்டார் □

## 2-5-90 புதன்

இருநேரப் பாடசாலைத் திட்டம் யாழ். மாவட்டத்தில் இன்று முதல் அமுலுக்கு வந்தது □ யாழ். பத்திரிகையாளர்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா, கோண்டாவிலில் சந்தித்து உரையாடினார் □

## 3-5-90 வியாழன்

வடக்கு - கிழக்கிற்கு சுவீடன் வழங்கும் ரூபா 300 கோடி செலவிலான நவீன தொலைபேசிச் சேவை நடைமுறைப்படுத்தப்படுமெனச் செய்தி வெளியானது □ வடபகுதிக் கடற்பகுதியில் கடந்த 4 மாதங்களில், ஒரு கோடி 75 லட்சம்ரூபா பெறுமதியான கடத்தற் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக, செய்தி வெளியானது □ வரதர் நாடு திரும்பினால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார் □

## 4-5-90 வெள்ளி

இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானியப்பிரதமர்டொஷிகி கைஃபுவும் பாரியாரும் இன்று காலை இந்தோனேஷியாவிற்குச் சென்றனர் □ வடபகுதியில் அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களின் தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்தி வெளியானது □ சிகிரியாவிலுள்ள உல்லாசப் பயணிகள் ஹொட்டேலில் நள்ளிரவில் ஆயுதபாணிகள் புகுந்து,7லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டனர் □

## 5-5-90 சனி

மலையக மக்களை நாடு கடத்த எடுக்கும் முயற்சிகளைக் கண்டித்து, ஈ. ஐ. மு. அறிக்கையொன்றை விடுத்தது □ தமிழ் அரசியல் மந்த நிலையைப் போக்குவது அரசின் பொறுப்பு என, கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டி யொன்றில், அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார் □ சிகிரியாக் காட்டின்மேல் பறந்த ஹெலிக்கொப்ரர் விழுந்து நொருங்கியதில் அதிலிருந்த ஆறு அதிகாரிகள் பலியானார்கள் □

## 6-5-90 ஞாயிறு

ஸ்ரீலங்கா அதிரடிப் படையினரின் பாதுகாப் டன் கணேமுல்லையில் ஈ. பி. ஆர். எல். எவ். இன் முகாமொன்று இயங்குவதாகச் செய்தி வெளியானது □ ஸ்ரீலாங்கா மக்கள் கட்சியின் ஒரு பிரிவின் தலைவியான சந்திரிகாவை, கட்சியிலிருந்து வெளியேற்றும் தீர்மானத்தை, ஒஸி பிரிவினர் நிறைவேற்றினர் □

## 7-5-90 திங்கள்

ஈ. பி. ஆர். எல். எவ். ஐச் சேர்ந்த சாம் தம்பிமுத்து எம். பி. நண்பகல் 1.20 அளவில் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்; கொலையாளிகள் தப்பிச் சென்றனர் □ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மீண்டும் பலாலியில் இயங்குமென துணைக் கல்வி அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார் □ இரத்தினபுரியில் பெய்து வரும் அடை மழை காரணமாக, 600 பேர் அகதிகளாகவெளியேறியுள்ளனர் □

## 8-5-90 செவ்வாய்

சாம் தம்பிமுத்து கொலைக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென, அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார் □ தமிழ் எம்.பி.க்களின் பாதுகாப்புக்கு விசேட திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக, அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார் □ இந்திய வம்சாவழியினரை இந்தியாவிற்குக் கட்டாயமாக வெளியேற்றுவது மனிதாபிமானத்துக்கு மாறானது என, தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் டி. அய்யாத்துரை தனதுஅறிக்கையில் குறிப்பிட்டார் □ வெள்ளவத்தையில் குண்டு வெடித்ததில் சில கடைகள் சேதமடைந்தன □

## 9-5-90 புதன்

சாம் தம்பிமுத்து கொலை தொடர்பாக கொழும்பின் பல பகுதிகளில் பொலிசார் தேடுதல் நடாத்தி, பல தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர் □ யால சரணாலயத்தில் ஆயுதங்களையும் பணத்தையும் பாதுகாப்புப் படையினர் கண்டு பிடித்தனர் □ றிசேர்வ் பொலிஸ் படைக்கு கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களிலிருந்து 1190பேர் தெரியப்பட்டதாகச் செய்தி வெளியானது □ கொழும்பில் 'அமைக்கப்பட்டுள்ள 20 பெரிய வெசாக் பந்தல்களை ஏராளமான மக்கள் பார்வையிட்டனர் □

## 10-5-90 வியாழன்

முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச இருக்கிறோம் என, முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார் □ சாம் தம்பிமுத்துவின் இறுதிக்கிரிகைகள் கணத்தையில் நடைபெற்றன; பல அரசியல் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர் □ சிகிரியாக் கொள்ளையர் மீது அதிரடிப் படையினர் தாக்கியதில் இருவர் கொல்லப்பட்டனர்; பல கொள்ளைப் பொருட்கள் மீட்கப்பட்டன □ எமது புதிய சமுதாயத்தின் நீதி நிர்வாக முன்னோடியாக இப்போது ஆரம்பிக்கப்படுகின்ற இணக்க மன்றுகள் அமையப் போகின்றன என, தர்மபுரத்தில் மாத்தயா கூறினார் □

## 11-5-90 வெள்ளி

கொழும்பில் 150 தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு பொலிசாரால் விசாரிக்கப்பட்டு வருவதாக செய்தி வெளியானது □ வடபகுதிக்குத் தினமும் இரவில் கடுகதி ரயில் சேவை நடத்தப்பட வேண்டுமென்று, கே. நவரத்தினம் எம். பி. ஜனாதிபதியை கடித மூலம் கோரினார் □ மனிதாபிமானத்தை அடிநாதமாய்க் கொள்ள த கலை உயிரற்ற உடல் போன்றது என, வைபவமொன்றில் ஜனாதிபதி தெரிவித்தார் □

## 12-5 90 சனி

வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளின் ஆட்சியே நடைபெறுகின்றது. இந்தச் சூழ்நிலையை நீக்கத்தவறுமானால், அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என, காலியில் பொதுக் கூட்டமொன்றில் சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்தார் □ கடந்த காலங்களில், ஏமாற்றுக்காரர்கள் நடாத்திய அரசியல் வியாபாரம் - தொழிற்சங்க வியாபாரத்தினால் மக்களும் தொழிலாளரும் பிளவுபட்டனர் என, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப்பிரமுகர் ப.மூர்த்தி தெரிவித்தார் □

## 13-5-90 ஞாயிறு

அரசு — புலிகள் பேச்சுவார்த்தையை ஈ. பி. ஆர். எல். எவ். குழப்பாது என, க. யோகசங்கரி எம். பி. பத்திரிகைப் பேட்டியொன்றில் குறிப்பிட்டார் □ இலங்கையிலிருந்து இந்தியப்படை வெளியேறியதை வரவேற்று, ஜே.வி.பி.அறிக்கையொன்றை விடுத்தது □ பாடசாலைகளில் மதியபோசனத் திட்டத்திற்கு 18 கோடி ரூபாவை இத்தாலி வழங்குமெனச் செய்தி வெளியானது □

## 14-5-90 திங்கள்

யாழ். பல்கலைக்கழகம், யாழ். வைத்தியசாலை என்பன இணைந்து கோரிக்கை விடுத்ததால் 300 கோடி ரூபா செலவிலான போதனா ஆஸ்பத்திரி மருத்துவபீடத்திற்கு அருகில் அமைக்கப்படுமென, கொழும்பில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது □ ஈ. பி. ஆர். எல். எவ். வுடனான பேச்சு வார்த்தைக்காக, லண்டனிலிருந்து அமைச்சர் ஹமீது நாடு திரும்பினார் □

## 'தூய ஒளி' கிண்ணச் சுற்றுப் போட்டி

குருநகர் சூசையப்பர் கழகத்தின் ஆதரவுடன் பாடும் மீன் விளையாட்டுக்கழகம், 'தூய ஒளி' வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை ஒழுங்கு செய்துள்ளது.

வட மாகாணரீதியில், 11 பேர் கலந்து கொள்ளும் நொக்கவுட் முறையிலான இப்போட்டியின் முடிவு திகதி 23-5-90 ஆகும்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடனேயே இப்போட்டிகள் யாவும் நடைபெறும்.

## அபகீர்த்தி...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ராணுவ ரீதியாக, முதல் தடவையாக வெளிநாட்டிலே எமது முப்படைகளும் கூட்டாகச் சேர்ந்து யுத்தகளத்தில் குதித்தன. இது வெறுமனே ராணுவ ரீதியிலான முயற்சி மட்டும் அல்ல தேசிய ரீதியிலான முயற்சியும் கூட. இந்தியாவின் முப்படைகளைத்தவிர மத்திய ரிசேவ் பொலிஸ் படையும், அதன் பெண்கள் பிரிவும் எல்லை வீதிகள் அமைப்பு நிறுவனமும் இந்திய செஞ்சிலுவைச் சங்கமும் தூரதர்ஷனும், ஒல் இந்திய றேடியோவும், தபாற் தந்தித் திணைக்களமும் இந்திய அமைதி காக்கும் படையின் அங்கங்களாக இயங்கித் தத்தமது பங்களிப்பைச் செலுத்தின. விமான இறங்கு துறைகள் மீள நிர்மாணிக்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களிற்கு நிவாரணம் தரப்பட்டது. ஒலிபரப்புக்கோபுரங்களும் செய்தித் தொடர்பு நிறுவனங்களும் நிறுவப்பட்டன''

கல்கட்டின் கூற்றிலிருந்து ஒரு உண்மை தெளிவாகிறது. அதாவது, இலங்கையில் யுத்தத்திலீடுபட்டிருந்த இந்தியப் படையை ஒரு அமைதிப்படையாகக் காட்டுவதற்காக ராஜீவ் அரசு அதீத நம்பிக்கைகளோடு தன்னாலியன்ற அளவு, தனது தேசிய வளங்களையெல்லாம் பாவித்தது என்பதுதான்.

அவர்கள் இங்கே வீதிகளைச் செப்பனிட்டார்கள். துறைமுகங்களை ஆழப்படுத்தினார்கள். விமான இறங்குதுறைகளை வசதியாக நிர்மாணித்தார்கள். மேலும், பீரங்கித் தாக்குதல்களால் சேதமடைந்த பொதுக்கட்டடங்களைத் திருத்திக் கொடுத்தார்கள். இவற்றோடு, பெண்கள் இம்சிக்கப்படுவதைத் தடுப்பதற்காக சோதனை நிலையங்களில் பெண்பொலிசார் நிறுத்தப்பட்டார்கள். முதலுதவி நிலையங்கள் அமைக்கப்பட்டு வறிய நோயாளிகளிற்கு மருந்து தரப்பட்டது. வறிய மக்கள் வாழுமிடங்களில் உணவுப் பொருட்களும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. பிரதான முகாம்களில் தொலைக்காட்சிக் கோபுரங்கள் நிறுவப்பட்டு தூரதர்ஷன் தமிழர்களிற்குத், தெளிவாகக் காட்டப்பட்டது ஆகாஷ்வாணி நேசக்கரங்கள், அன்பு வழி, வெற்றிமாலை போன்ற நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது. இந்நிகழ்ச்சிகளில், கெட்டுப் போன தமிழர்களே மனந் திரும்புங்கள் ...... சமாதானத்தை நாடுங்கள் என்பதான செய்தியே விடுக்கப்பட்டது. இவ்வாறு தன்னை ஒரு அமைதி காக்கும் படையாகக் காட்டிக் கொள்ள இந்தியப் படை மேற்கொண்ட தந்திரங்களையெல்லாம் தமிழர்கள் இகழ்ச்சியோடு நிராகரித்தார்கள். ராஜீவ் அரசின் சூழ்ச்சிப் பொறிக்குள் விழ இம்முறை இலங்கைத் தமிழர்கள் தயாராய் இருக்கவில்லை.

இந்திய — இலங்கை ஒப்பந்தமே இந்தியப்படையின் வருகைக்கு வழி கோலியது. ஆனால் அவ் வொப்பந்தம், இந்தியப்படை ஒரு அமைதிப் படையாகத் தொழிற்படுவதற்கு வேண்டிய அடிப்படைகளைக்கொண்டிருக்கவில்லை. தமிழர்கள் அதுவரை காலமும் சிந்திய குருதியின் பெறுமதியை அது மலினப்படுத்தியது. திட்ட வட்டமாகவே அது தமிழருக்கெதிரான சூழ்ச்சிகளைக் கொண்டிருந்தது. எனவே தமிழர்கள் அதை நிராகரித்தார்கள். கோபமுற்ற ராஜீவ் அரசோ தமிழர்களை முரட்டுத்தனமாகக் கையாண்டது. இந்தியப்படை நடைமுறையில், ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் படையாகவே தொழிற்பட்டது. ஒரு அமைதிப்படை என்ற வகையில் யுத்த நிறுத்தத்தை அவதானிக்க வேண்டிய இந்தியப் படை, மாறாக. ஒரு சாராரோடு திட்டவட்டமான தொரு யுத்தத்திலீடுபட்டது. ஆனால் ராஜீவ் அரசோ தான் அனுப்பியது ஒரு அமைதிப்படைதான் என நிரூபிக்க பிரசாரங்களை தமிழர்கள் மத்தியிலும் சர்வதேச அளவிலும் மேற்கொண்டது.

ஆனால் இந்தியப்படை காட்டியதாகச் சொல்லப்படும் இரக்கத்தை விடவும், தமிழர்கள் அனுபவித்த போர் பயங்கரமானதாயிருந்தது. யுத்தத்தின் காயங்கள் அத்துணை வலி மிகுந்தவைகளாய் இருந்தன.

இந்தியர்கள் தரப்பில் இந்த யுத்தத்தில் துருப்புக்கள் ஒரு கை பின்னால் கட்டப்பட்ட நிலையிலேயே இயங்க வேண்டியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இதுவும் இந்தியப் படையை அமைதிப்படையாகக் காட்டும் தந்திரம்தான். அதாவது ஒரு அமைதிப்படை என்ற வகையில் பொதுசனங்களிற்கு உண்டாகக்கூடிய சேதங்களைக் கருத்திற் கொண்டு இந்தியப்படை கட்டுப்பாடாகவும், மென்மையாகவும் நடந்து கொண்டது என்பதே.

ஆனால், யுத்தத்தின் கொடிய நாட்களை வெறுப்புடனே நினைவு கூரும் தமிழர்களைப் பொறுத்தவரை, இந்த ஒற்றைக்கைத் தர்மம் எல்லாம், தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராயிராத சில இந்தியர்களின் முட்டாள்தனமான வாதமே! □

திசை
THISAI

# வெள்ளையரல்லாத அகதிகள் மே. ஜேர்மனியில் படும்பாடு

## திசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குழி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

### ஜனநாயகமும் பாஸிஸமும்

கொம்யூனிச அடக்கு முறை யிலிருந்து விடுபட்ட கிழக்கு ஜேர்மனி தனக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் துஷ்பிரயோகம் செய்து விடுமோ என்ற எண்ணம்இன்று அங்கு நிகழ்ந்து வரும் சில சம்பவங்களிலிருந்து காணக் கூடியதாக உள்ளது.

அடக்குமுறைக்குக் காரணமாய் இருந்த கொம்யூனிச சித்தாந்தத்தில் ஏற்பட்ட ஆத்திரம் அந்தச் சித்தாந்தத்துக்குக் காரணமாகவும் ஆதரவாகவும் இருந்த யூத இனத்துக்கு எதிராகத் திரும்பும் சில போக்குகளையும் கொண்டுள்ளதாக இன்று அங்கே இடம் பெறும் மக்கள் நடவடிக்கைகளிலிருந்து காணக் கூடியதாக உள்ளது. இது மீண்டும் இணையும் ஜேர்மனிகளை ஹிட்லர் கால பாஸிஸ ஆட்சிக்குள் விழுத்திவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது விடுதலை பற்றியும் ஜனநாயகம் பற்றியும் மக்கள் கொண்டுள்ள தவறான நோக்கையே காட்டுகிறது.

ஜனநாயகம் என்பது மக்கள் சக்தியையும் அதிகாரத்தையும் முதன்மைப்படுத்துவது. இந்த ஜனநாயக அமைப்புள் ஒவ்வொரு பிரஜையும் தனது அடிப்படை உரிமைகள் தனது சக பிரஜையின் அடிப்படை உரிமைகளுக்கு பங்கம் ஏற்படாதவாறு பேணப்படுவதைப் பார்த்துக் கொள்வதே சுதந்திரமாகும். ஒரு இனத்தின் உரிமைகள் மற்றோர் இனத்துக்கு மறுக்கப்படும் பட்சத்தில் அங்கு உண்மையான ஜனநாயகமோ சுதந்திரமோ நிலவுகிறதெனக் கூறமுடியாது.

இலங்கை சுதந்திரம் அடைய முன்னர், அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராகச் சிங்களவரும் தமிழ் பேசும் மக்களும் போராடினர். அவர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் விளைவே இன்றைய சுதந்திர இலங்கையாகும்.

ஆனால் சுதந்திரம் பெற்ற பின்னர் பெரும்பான்மை தேசிய இனம், தமிழ் பேசும் தேசிய இனத்தை ஒடுக்க முற்பட்டதின் விளைவே இங்கு மீண்டும் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் நெருக்கடி ஏற்பட்டதற்குக் காரணமாகும். இதனால் இலங்கையில் மீண்டும் ஓர் அந்நிய ஆதிக்கம் நுழையும் நிலை ஏற்பட்டது. அந்நிய ஆதிக்கத்துக்கும் அடக்குமுறைக்கும் எதிராக நாம் போராடும் போது எப்படி நமக்குள்ளே புரிந்துணர்வும் ஒருவரை ஒருவர் மதிக்கும் நிலையும் ஏற்படுகிறதோ, அந்நிலையே அந்நிய ஆதிக்கம் அகன்ற பின்னரும் நீடிக்க வேண்டும். மாறாக ஆபத்து அகன்ற பின் பெரும்பான்மை இனம் ஜனநாயகத்தின் பேரில் தன்னை முதன்மை படுத்தும்போது, அங்கே பாஸிஸம் தலை தூக்குகிறது. மீண்டும் அழிவும் சுதந்திரத்துக்கு நெருக்கடியும் ஏற்படுகிறது.

இது ஜேர்மனிக்கு மட்டுமல்ல நமது இலங்கைக்கும் பாடமாக இருக்கவேண்டும்.

---

சமீபத்தில் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசில் கொண்டுவரப்பட்ட புதிய சட்டத்தின் பிரகாரம் அகதி அந்தஸ்து கோரியோரில் 99 விகிதத்தினரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்கள் ஜேர்மனிற்கு வந்து 9 வருடங்கள் கழிந்த பின்னரே வேலை செய்யவும் அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது. மேலும், இவர்கள் 'காத்திருப்போர்' என்று பெயரிடப்பட்ட வசிப்பிட அனுமதிப்பத்திரத்துடன் ஜேர்மனியில் தங்க அனுமதிக்கப்படுவார்களாம். இந்த நிலையில் ஜேர்மனியிலுள்ள இலங்கை அகதிகள் எப்பொழுதும் திருப்பி அனுப்பப்படலாம் என்ற நிலை தோன்றியுள்ளது.

முன்பு அகதிகள் ஒரு அறைக்குள் இருவர் மட்டுமே தங்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இப்போது ஒரு அறைக்குள் ஒரு முழுக்குடும்பம் தங்கியிருந்தாலும் கூட, அதுபற்றி ஜேர்மன் அரசாங்கம் அலட்டிக்கொள்வதில்லை. சமீபகாலங்களில் அதிகரித்து வரும் கிழக்கு ஐரோப்பியரின் வருகையோடு அகதிகள் பெரிய அளவில் வசிப்பிடப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் தொழில் தேடுவதிலும், கிழக்கு ஐரோப்பியருக்கும் வெள்ளையரல்லாத அகதிகளுக்கும் இடையில் போட்டி நிலவுகிறது. இதனால் கிழக்கைரோப்பியர் வெள்ளையரல்லாத அகதிகளை எரிச்சலோடு பார்க்கிறார்களாம். சமீப காலங்களில் ஜேர்மனியில் வளர்ச்சி பெற்றுவரும் நவநாஸிச போக்குகளும், வெள்ளையரல்லாத அகதிகளிற்கு அச்சுறுத்தலாகவே யுள்ளன. இந்நிலையில் இணையப் போகும் ஜேர்மனியின், ஜேர்மன் தேசிய வாதம் வெள்ளையரல்லாத அகதிகளிற்கு எதிரானதாக இருக்கப்போகிறதா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

## பிரதேச....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப் பிரதேச கல்லூரிகள் 'டிப்ளோமா' பயிற்சி நெறிகளை நடாத்துமாம். ஏற்கெனவே முடிவை எடுத்துவிட்டு, இம் முடிவை எவ்வாறு நடைமுறைப் படுத்தலாம் என்பது குறித்து அரசாங்கம் இப்பொழுது கல்விமான்களிடம் ஆலோசனை கேட்கின்றது!

இப்பிரதேசக் கல்லூரிகள் புதிதாக நிறுவப்படுமா? அல்லது இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் உயர் கல்லூரிகளை அரசாங்கம் சுவீகரித்து அவற்றை பிரதேசக் கல்லூரிகளாகத் தரம் உயர்த்துமா? அரசாங்கத்திற்கே இதற்கு விடை தெரியுமோ என்பது சந்தேகமே!

ஏனைய மாகாணங்களிலுள்ள உயர் கல்லூரிகளை அரசாங்கம் சுவீகரித்து, அவற்றை பிரதேசக் கல்லூரிகளாகத் தரம் உயர்த்தினால் அவ்வளவு பாதிப்பு ஏற்படாது. ஆனால் வட கிழக்கில் எஞ்சியிருக்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய முன்னணி உயர் கல்லூரிகளை அரசாங்கம் சுவீகரித்து அவற்றைப் பிரதேச கல்லூரிகளாக மாற்றினால் அது தமிழரின் உயர் கல்விக்கு சாவுமணி அடிக்கும் என கல்விமான்கள் கருதுகின்றனர்.

உத்தேச மறுசீரமைப்பை ஆராய்ந்து வேண்டிய ஆலோசனைகளை வழங்க உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி பல எஸ். ரி,எவ். களை நியமித்துள்ளார். முன்பு அவர் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த 'பழக்க தோஷ'த்தினால் போலும் இந்த ஏற்பாடு.

பழைய எஸ். ரி. எவ். தமிழரின் உயிர்களுக்கு இயமன் ஆகியது. இந்த எஸ். ரி. எவ். களோ தமிழரின் உயர்கல்விக்கு உலை வைத்து விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது, தமிழரைப் பொறுத்தவரை பிரதேசக் கல்லூரிகள் 'பிரேதக் கல்லூரிகள்' ஆகலாம்.

## சாம் தம்பி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மே 7 ஆம் திகதி சாம் தம்பி முத்துவை கனேடியன் தூதரகத்தின் முன்பாக ஆயுதந் தாங்கிய மூன்று இளைஞர்கள் சுட்டுக் கொன்றனர். அவரது மனைவியார் கலா தம்பி முத்து படுகாயமடைந்த நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர்கள் மே 10 ஆம் திகதி அளவில் இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்குச் செல்லவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாம் தம்பிமுத்துவின் கொலையை அடுத்து, தமிழ் இளைஞர்கள் தங்கியிருக்கும் விடுதிகளும், அறைகளும் பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டதோடு, 100 இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கனேடிய தூதாகத்தில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனராம்.

திருமதி தம்பிமுத்து இறந்துவிட்டதாக புதன்கிழமை மாலை வானொலி அறிவித்தது.

## பிரபாவின்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி தகவலை, அதாவது புலிகள் ஆரம்பமிருந்தே ஒப்பந்தத்திற்கு எதிரானவர்கள் என்பதை இந்திய உளவு நிறுவனமோ, அல்லது கொள்கை வகுப்பாளர்களோ, இந்திய ராணுவத்திடம் தெரிவிக்கவில்லை என்றும், புலிகளின் பலம் பற்றிய பிழையான தகவல்களே ராணுவத்தினருக்கு வழங்கப்பட்டது என்றும், இவற்றோடு இராணுவத் தளபதிகளின் போர் உத்திகள் பலவீனமானவைகளாயும் இருந்தமையாலேயே, இந்திய ராணுவம் புலிகளுடனான போரில் தோற்கும்படியாயிற்று என 'இந்து'மேலும் எழுதியுள்ளது,

## கைஃபு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் விளைவாக, விப்பாசி தேரர் இம்மாதம் 27 ஆம் திகதி இலங்கைக்குத் திரும்பும் போது அவரை வரவேற்கவிருக்கும் குழுவிற்கு, அரசு எந்தவித ஆதரவையோ அங்கீகாரத்தையோ வழங்க மாட்டாது என ஜனாதிபதி பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

அண்மையில் ஜப்பானியப் பிரதமர் கைஃபு இலங்கைக்கு விஜயம் செய்த போது அவருக்குச் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கையும் யப்பானும் பௌத்த நாடுகள் என்று இங்கு தம்பட்டம் வேறு அடித்தார்கள்! ஆனால் ஜப்பானிலுள்ள மகாயான பௌத்தத்தை மட்டும் இங்கு நுழைய விட்டால் அது தேரவாத பௌத்தத்திற்கு பெரிய இழுக்காம்!

பணஉதவி வரலாம்; ஆனால் பௌத்தமாக இருந்தாலும், மகாயான பௌத்தம் இங்கு அனுமதிக்கப்படமாட்டாது!

## மேதினம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கர்களை நோக்கிச் சதா கையசைத்தபடியிருந்தார்.

இதில் இன்னும் வேடிக்கையானது என்னவென்றால் ஒவ்வொரு பிரதிநிதியும் பேசிய பின்னர் ஒரு பாடல் பாடப்பட்டது. அது ஒரு இன்னிசை மாலையாகவே இருந்தது; மேதினக் கூட்டமாக அல்ல.

### 'மேடே' மேடையில் 'கபரே'

விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக, சோவியத் கலாசார நடனம் இடம் பெற்றது, அமைச்சர்களிற்கும், பிரமுகர்களிற்கும், 5 லட்சம் மக்களிற்கும் ஒரு பெண் தனது பாதி நிர்வாணத்தை அசைத்துக் காட்டினார்.

### சிங்களக் கடும் போக்காளர் முகஞ்சுழிப்பு

விழாவிற்கு விசேட விருந்தினர்களாக வந்திருந்த தென்னிந்தியப் பாடகர்களான பாலசுப்பிரமணியம், சித்ரா, இசையமைப்பாளர் கங்கை அமரன் போன்றோரின் இசை நிகழ்ச்சிக்குப் பின்னரே உள்நாட்டுச் சிங்கள இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இரவு 11 மணியளவில் தமிழ் இசை நிகழ்ச்சி முடிவடையவும், வந்திருந்த மக்கள் கூட்டத்தில் கிட்டத்தட்ட 4 1/2 லட்சம் பேர் கலைந்து சென்றுவிட்டார்கள். இவ்வாறு தமிழிற்கு முதலிடம் தரப்பட்டது சிங்களக் கடும் போக்கர்களைத் திருப்திப் படுத்தவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாயிருந்தது.

## புலிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகிற ஜூன் முதலாம் திகதியே வாகன அனுமதிப் பத்திரம் பெறுவதற்குரிய கடைசித் திகதியாகும். ஆனால் இந்தக் கால அவகாசம் மேலும் நீடிக்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் வாகன அனுமதிப் பத்திரங்கள் பெறுவதற்கான திகதி திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டபின்,வாகனங்கள், குறிப்பாக பயணிகளை ஏற்றிச் செல்லும் மினி வான்களில், அதிகூடியவேகம், பயணிகளை நெருக்கி அடைதல் போன்றவை குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 18-5-1990இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Q. D. / 83 / News / 90.